பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 05, செவ்வாய்க்கிழமை 18.04.2017 | கதிர் 163

Facial, Straightening, Bleaching, Face Massaging, Threading.
வெலா சலூன்
Ladies & Gents
இல.8, நவீன சந்தை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 658 4453, 021 205 4116

# காணி விடுவிப்பைத் தீர்மானிக்கும் பொறிமுறை குறித்து நேற்று முடிவு


## முதலில் மாவட்ட மட்டத்தில் கள ஆய்வு பின் கொழும்பில் கூடி இறுதி செய்தல்

**கொழும்பு, ஏப்ரல் 18**

**வடக்கில் படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஆராய்வதற்கான பொறிமுறை ஒன்றுக்குப் பாதுகாப்புத் தரப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நேற்று இணங்கின.**

**இதன்படி, இரு தரப்பினரும் மாவட்ட மட்டத்தில் படையினர் வசமுள்ள காணிகள், நிலங்களுக்கு முதலில் நேரில் சென்று கள ஆய்வு செய்வார்கள். பின்னர் அதனடிப்படையில் கொழும்பில் கூடி விடுவிக்கப்படும் காணிகள் குறித்து முடிவு செய்வார்கள்.**

பக்கம் 18 >>>



## கைதாவார் ஷிரந்தி?



கொழும்பு, ஏப். 18

பிரபல ரகர் வீரர் வசீம் தாஜுதீனின் கொலை தொடர்பில் ஷிரந்தி ராஜபக்ஷ விரைவில்கைது செய்யப்படுவார் என்று கூறப்படுகிறது.

தாஜுதீனின் கொலை இடம்பெற்றபோது அலரி மாளிகையிலிருந்து 41தொலைபேசி அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இனங் கண்டுள்ளனர் என்றும் - இந்தத் தொலைபேசி அழைப்புகள் ஷிரந்தியின் தனிப்பட்ட

பக்கம் 18 >>>

## படையினர் கையகப்படுத்தியுள்ள காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும்

### பாதுகாப்பு அமைச்சு சந்திப்பில் தமிழ்க் கூட்டமைப்பு வலியுறுத்து

கொழும்பு, ஏப். 18

"எமது மக்கள் தங்களுடைய சொந்தக் காணிகளில் குடியேற வேண்டும் என்று பெரும் ஆவலாக இருக்கின்றனர். அவர்களின் ஆவல், தவிப்பு நியாயமானது. பொதுமக்களின் காணிகளை அரசு காரணமின்றி நீண்டநெடுங்காலமாக வைத்திருக்க முடியாது.

"தற்போது யுத்தமும் இல்லை; புலிகளும் இல்லை. இவ்வாறான நிலையில், பாதுகாப்புப் படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள மக்களின் காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்."

பக்கம் 18 >>>

## பிரமுகர்கள் பயணிக்கும் வாகனத்தை தகர்க்கும் குண்டே 'கப்டன் பவான்'

### அதுவே உக்கிளாங்குளத்தில் மீட்கப்பட்டது

வவுனியா, ஏப். 18

வவுனியா - உக்கிளாங்குளம் பகுதியில் அண்மையில் மீட்கப்பட்ட குண்டு, பிரமுகர்கள் பயணிக்கும் வாகனங்களைச் சிதறடிக்கும் அதிசக்திவாய்ந்தது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

'கப்டன் பவான் (ஐயா) 99' எனப்பெயர்குறிப்பிடப்பட்டுள்ள, 15 கிலோ 150 கிராம் நிறை

பக்கம் 18 >>>

## மீதொட்டமுல்ல அனர்த்தத்தில் உயிரிழப்பு 30 ஆக உயர்வு


### தலா ஒரு லட்சம் ரூபா இழப்பீடு

கொழும்பு, ஏப்.18

மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்து விழுந்ததில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள்ளது என இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. நேற்றுப் பிற்பகல்

பக்கம் 18 >>>

## ஜனாதிபதி மைத்திரிபால நேற்று நயினாதீவுக்கு ஆன்மீக விஜயம்



யாழ்ப்பாணம், ஏப்.18

ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன நேற்று நயினாதீவுக்குச் சென்று அங்குள்ள நாக விகாரை மற்றும் நயினை நாக பூஷணிஅம்மன்ஆலயத்திலும் வழிபாடாற்றினார்.

நேற்று முற்பகல் நயினாதீவுக்குச்சென்றஜனாதிபதிமுதலில் நாகவிகாரைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

நாக விகாரையின் விகாராதிபதி வண. நவந்தகல பதுமகித்தி திஸ்ஸ தேரரைத் தரிசித்து ஆசி பெற்றதுடன் அவரது நலன்

பக்கம் 18 >>>

## 'ஐநூறு நாளானாலும் ஓயமாட்டோம்!'



மட்டக்களப்பு, ஏப். 18

"நியமனம் கோரி நடத்தப்படும் எமது போராட்டம் ஐம்பது நாளை எட்டியுள்ளது. ஐம்பது என்ன, ஐநூறுநாள்களாயினும் நாம் ஓயாமல் போராடுவோம். எங்களுக்குநியமனம்வழங்கப்படும் வரை எமது போராட்டம் தொடரும்."

- இவ்வாறு, அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் அரசாங்கத்தில் கூட இவ்வாறு தொழிலுக்காகப் போராடியதில்லை. நல்லாட்சி அரசாங்கத்தில் போராடுவது

பக்கம் 18 >>>

## சீனாவுடன் ஒப்பந்தம் செய்தால் அம்பாந்தோட்டை 'அம்போ' தான்!

### முன்னாள் கடற்படைத் தளபதி எச்சரிக்கை

கொழும்பு , ஏப். 18

அம்பாந்தோட்டைத்துறைமுகம் தொடர்பாக சீனாவுடன் உடன்பாடு கைச்சாத்திடப்பட்டால் அங்கு சீனக் கடற்படைத் தளமும், சீன விமானப்படைத் தளமும் அமைக்கப்படுவது உறுதியாகிவிடும் என இந்தியாவின் முன்னாள் கடற்படைத் தளபதிவைஸ்அட்மிரல்அருண் குமார் சிங் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

'சீனாவின் காசோலைப் புத்தக ராஜதந்திரம்' என்ற தலைப்பில் 'டெக்கான் குரோனிக்கல்' நாளிதழில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றிலேயே அவர் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

வைஸ் அட்மிரல் அருண்

பக்கம் 18 >>>



### முள்ளிவாய்க்கால், வட்டுவாகல் பகுதிகளில் கடற்படையினர் வசமுள்ள

# காணிகளை விடுவிக்கக் கோரி நாளை கவனவீர்ப்புப் போராட்டம்

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால், வட்டுவாகல் பகுதிகளில் கடற்படையினர் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்கக்கோரி நாளை புதன் கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம் எனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் முள்ளிவாய்க்கால் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்த முடிவை அந்த மக்கள் எடுத்துள்ளனர்.

முள்ளிவாய்க்கால் பகுதியில் பொதுமக்களுக்குச் சொந்தமான 397 ஏக்கர் காணி மற்றும் அரச காணிகள் உட்பட 617 ஏக்கர் வரையான காணியை 2009 ஆம் ஆண்டு முதல் கடற்படையினர் ஆக்கிரமித்து வைத்துள்ளனர். அந்தக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பொதுமக்களுக்கு சொந்தமானகால்நடைகளும் உள்ளன.

அந்தக் காணிகளை விடுவிக்குமாறும் கால் நடைகளை மீட்டுத்தருமாறும் அதன் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர். எனினும் அந்தக் காணிகளை கடற்படையினர் தமது தேவைக்கு சுவீகரிக்கும் விதத்தில் இரண்டு தடவைகள் அளவீடு செய்ய முற்பட்ட சமயம் பொதுமக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

தற்போது கடற்படையினர் ஆக்கிரமித்து வைத்துள்ள சுமார் 617 ஏக்கர் காணிகளும் மிகவும் வளம் நிறைந்த பகுதியாகவும் அதிக வருமானம் தரக்கூடிய கடற்றொழில் பகுதிகளையும் கொண்டுள்ளது. இதனை விடுவித்துத் தருமாறு அதன் உரிமையாளர்கள் கடந்த ஏழு ஆண்டுகளாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

அவர்களின் கோரிக்கைகளுக்கு உரியதரப்புக்கள் செவி சாய்க்காத நிலையில் வட்டுவாகல் முள்ளிவாய்க்கால் பகுதிகளை உள்ளடக்கி அமைந்துள்ள கடற்படை முகாம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக இதன் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடற்படையினர் வசமுள்ள 617 ஏக்கர் காணிகளும் இறுதிப்போரில் இடம்பெற்ற பகுதியாகக் காணப்படுவதுடன் அந்தப்பகுதிக்குள் பொது மக்களின் பெருமளவான சொத்துக்களும் கைவிடப்பட்டுள்ளன. அந்தப் பகுதியில் பொது மக்களுக்குச் சொந்தமான 397 ஏக்கர் காணி தவிர ஏனைய அரச காணிகள் கடற்றொழில் பல்கலைக்கழகம் மற்றும் கடற்றொழில் பயிற்சி நிலையங்கள் என்பன அமையக்கூடிய இடமாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## எச்.ஐ.வி.தொற்றால் 3 மாதங்களில் 73 பேர் பாதிப்பு

கொழும்பு, ஏப்.18

எச்.ஐ.வி நோய்த் தொற்று காரணமாக இந்த வருடத்தின் முதல் 3 மாத காலங்களில் 73 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்என்று தேசிய பால் வினை மற்றும் எயிட்ஸ் ஒழிப்பு வேலைத் திட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கடந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் எச்.ஐ.வி. நோய்த் தொற்று காரணமாக, 66 பேர் மாத்திரமே பாதிக்கப்பட்டிருந்தனர்.

தற்போதுவரை, எச்.ஐ.வி. நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்் 630 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, 425 பேர், எயிட்ஸ் காரணமாக உயிரிழந்துள்ளனர். அத்துடன், கடந்த 3 மாதங்களில் மாத்திரம்7பேர்உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## இந்தியப் பெருங்கடலில் இலங்கையின் நிலைப்பாடு முக்கியத்துவம் வாய்ந்தது



### ரணிலுடனான சந்திப்பில் வியட்நாம் பிரதமர் தெரிவிப்பு

இந்தியப் பெருங்கடலில் இலங்கையின் நிலைப்பாடு முக்கியத்துவம் வாய்ந்துள்ளது என வியட்நாம் தெரிவித்துள்ளது.

இலங்கையுடனான உறவுகளைப் பலப்படுத்துவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளதாக வியட்நாம் பிரதமர் ஷூஎங் பூ தெரிவித்துள்ளார்.

வியட்நாமுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பின் பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இரு தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை அதிகரிக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

**இரு ஒப்பந்தங்கள் கைச்சாத்து**

இதேவேளை, இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையில் இரண்டு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வியட்நாம் பிரதமர் ஷூஎங் பூ மற்றும் இரு நாடுகளின் அமைச்சர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

2017 -2019 ஆண்டுகளுக்கான விவசாய அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான செயற்பாட்டுத் திட்டம் தொடர்பான உடன்படிக்கையில் வியட்நாம் விவசாய அமைச்சர் கையெழுத்திட்டுள்ளார்.கல்வி ஒத்துழைப்பு தொடர்பான உடன்படிக்கையில் வியட்நாம் கல்வி அமைச்சர் கையெழுத்திட்டுள்ளார்.

வியட்நாமுக்கான இலங்கையின் தூதுவர் ஹசந்தி திஸநாயக்க, இலங்கை சார்பில் உடன்படிக்கைகளில் கையெழுத்திட்டார் என்று பிரதமரின் அலுவலகம் தெரிவித்துள்ளது. (எ)



## ஊர்காவற்றுறையில் குடிதண்ணீர் சுத்திகரிப்பு தொகுதி திறந்து வைப்பு

ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயத்தின் வளாகத்தில் கடற்படையினரால் அமைக்கப்பட்ட குடி தண்ணீர் சுத்திகரிப்புத் தொகுதி யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஆயரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய கடற்படையினரால் கடந்த மாத இறுதியில் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதி அமைக்கப்படும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வடபகுதி கடற்படை கட்டளைத் தளபதி மற்றும் கடற்படை அதிகாரிகள், குருமார்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ)

## நோயாளிக்குச் சிகிச்சை அளிக்க முன் மரபணுப் பரிசோதனை செய்யத் திட்டம்

### சுகாதார அமைச்சு முன்னெடுக்கத் தீர்மானம்

கொழும்பு, ஏப்.18

நோயாளி ஒருவருக்கு சிகிச்சையளிப்பதற்கு முன் அவருக்கு மரபணுச் பரிசோதனை ஒன்றை நடத்தி அதற்கேற்ப சரியான மருந்துகளை வழங்குவதற்கான திட்டம் ஒன்றை சுகாதார அமைச்சு முன்னெடுக்க உள்ளது.

நோயாளி ஒருவருக்கு சிகிச்சையளிக்கும் போது அவரது மரபணு பற்றிய பரிசோதனையை நடத்தி மருந்துகளை வழங்குவது வெற்றியளிப்பதாக அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் மூலம் தெரியவந்துள்ளது.

அதேமுறையை இலங்கையிலும் பின்பற்றுவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்திருக்கின்றது என்று தெரியவருகின்றது.

விசேடமாக புற்று நோயாளிகளிடம் மேற்கொள்ளப்படும் மரபணு பரிசோதனைகளின் மூலம் அவர்களின் ஆயுள் காலத்தை 84 வீதம் அதிகரிக்கலாம் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

## போராட்டத்தை வேறு வடிவமாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை

### இன்று கலந்துரையாடலுக்கு ஏற்பாடு

கிளிநொச்சி, ஏப்.18


கிளிநொச்சியில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலையை வலியுறுத்தி, பெப்ரவரி 20ஆம் திகதி முதல், உறவினர்களால் முன்னெடுக்கப்படும் கவனவீர்ப்புப் போராட்டம், நேற்று 57ஆவது நாளாகத் தொடர்கிறது.

இந்நிலையில், இந்தப் போராட்டத்தின் வடிவத்தை மாற்றி வேறு வடிவத்தில் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான விசேட கலந்துரையாடல், கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் அன்னதான மண்டபத்தில் இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, கிளிநொச்சியில் உள்ள அனைத்துப் பொது அமைப்புக்களையும் இந்த விசேட கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ)

# புலிகளுக்கு எதிரான போருக்கு இந்தியாவே உதவி வழங்கியது

## அது இந்தியாவுடைய போர் என்கிறார் மஹிந்த



தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போருக்கு இந்தியாவே சகல வழிகளிலும் உதவியது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முதற் தடவையாகத் தெரிவித்துள்ளார்.

உண்மையில் அது இந்தியாவினுடைய போர்தான். என்னுடைய போர் அல்ல எனவும் மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

புதுடெல்லியைத் தளமாகக் கொண்ட ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்த செவ்வியிலேயே முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளை அழிப்பதற்கான போரில் இலங்கை அரசாங்கம் ஆயுதங்கள், பயிற்சி மற்றும் விமானங்களை சீனா, பாகிஸ்தானிடம் இருந்து பெற்றது.

அந்த நேரத்தில் இந்தியாவிடம் நீங்கள் உதவி கோரினீர்களா, அவ்வாறு கோரியிருந்தால் அதற்குப் புதுடில்லி எவ்வாறு பதிலளித்தது? என்று மஹிந்த ராஜபக்ஷவிடம் புதுடில்லி ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியிருந்தது.

அதற்குப் பதிலளித்த மஹிந்த ராஜபக்ஷ - "அவர்கள் எமக்கு உதவினர். நாங்கள் கேட்கவில்லை. ஏனென்றால், நான் உங்களுடைய போருக்காகவே சண்டையிட்டேன். உண்மையில் அது இந்தியாவினுடைய போர், என்னுடைய போர் அல்ல.

விடுதலைப் புலிகள் உங்களின் பிரதமர் ராஜீவ் காந்தியையும், பல பொதுமக்களையும், இந்தியாவில், உங்களுடைய மண்ணிலேயே கொலை செய்தனர். அந்த வகையில் இது என்னுடைய போர் மாத்திரம் அல்ல. அது இந்தியாவினுடைய போர்.

இது மனிதாபிமானப் போராக இருந்தது. இந்தியா சாத்தியமான எல்லா வழிகளிலும் எமக்கு உதவியது. ஊடகங்களிடம் அதிகமாகக் கூறி, நாங்கள் அதனை பகிரங்கப்படுத்த விரும்பவில்லை. சீனா மாத்திரமல்ல பிரித்தானியா, அமெரிக்காவும் கூடப் போரின்போது எமக்கு உதவின." - என்றும் மஹிந்த ராஜபக்ஷ கூறினார். (ம)

## இலங்கை மீனவர்கள் 13 பேர் கைது

கொழும்பு, ஏப்.18

சட்டவிரோத வலைகளை பயன்படுத்தி புல்மோட்டை, கொடுவகட்டுமலைகடற்பிராந்தியத்தில் மீன்பிடியில் ஈடுபட்ட இலங்கை மீனவர்கள் 13 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 3 டிங்கி படகுகளையும் தடைசெய்யப்பட்ட வலைகளையும் 350 கிலோ நிறையுடைய மீன்களையும் கடற்படையினர் கைப்பற்றினர். (ம)

## உழவுஇயந்திரத்துடன் நீர்த்தாங்கி வழங்கல்

சாவகச்சேரி பிரதேச சபைக்கு அனர்த்தமுகாமைத்துவபிரிவால் புதிய உழவு இயந்திரத்துடன் நீர்த் தாங்கியும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றது. புதிய நீர்த்தாங்கி சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் திருமதி முகுந்தினி கோடீஸ்வரனிடம் யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனால் வழங்கப்பட்டது. (ம-22)

## இலங்கையில் புதிய சிகரெட் கம்பனியை பதிவு செய்வதற்கு முயற்சிகள் தீவிரம்

### ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுசெல்லத் தீர்மானம்!

இலங்கைக்குள் மற்றுமொரு சிகரெட்நிறுவனத்தைப் பதிவுசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தொடர்பாக செய்திகள் வெளியாகியுள்ளநிலையில், அந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுசெல்ல அரச வைத்திய அதிகாரிகள்சங்கம்தீர்மானித்துள்ளது.

சிகரெட் பாவனையைக் கட்டுப்படுத்த ஜனாதிபதியால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு தமது சங்கம் நிபந்தனையற்றஆதரவளித்துள்ளது என அரசவைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் நலிந்த சொய்சா தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, இலங்கைக்குள் புதிய சிகரெட் நிறுவனம் ஒன்று பதிவு செய்யப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக ஆராய்ந்து இதன் பின்னால் இருக்கும் வர்த்தகர்கள் தொடர்பில் நாட்டுக்கு வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்க எமது சங்கம் முடிவு செய்துள்ளது எனவும் நலிந்த சொய்சா மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## 137 வருடங்களின் பின்னர் தற்போது வெப்பம் அதிகம்

இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் உட்பட பல நாடுகளிலும் அண்மைக் காலமாக அதிகளவிலான வெப்பநிலை காணப்படுகின்ற நிலையில், கடந்த 137 ஆண்டுகளில் இந்த வருடம் மார்ச் மாதம் அதிக வெப்பம் நிலவிய மாதமாகப் பதிவாகியுள்ளது.

அமெரிக்க வானவியல் ஆராய்ச்சி மையமான நாசா, 6 ஆயிரத்து 300 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபரங்களின் அடிப்படையிலேயே இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. (ம)

## புலிகளின் நிதிகளை நாட்டுக்குள் கொண்டுவர முயற்சி செய்கிறது அரசு - பந்துல குணவர்தன

கொழும்பு, ஏப். 18

புலம்பெயர் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களின் பெரும் தொகை நிதிகளை மத்திய வங்கி மூலம் இல்லாமல் வேறு வழிகளில் நாட்டுக்குள் கொண்டு வருவதற்கு அரசு முயற்சி செய்கின்றது.

இவற்றை அடிப்படையாகக் கொண்டே அரசு நாணயமாற்று கட்டுப்பாட்டுத் திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகப் பந்துல குணவர்தன குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது குறித்து பந்துல கூறியிருப்பவை வருமாறு:-

மத்திய வங்கியின் நிதி தொடர்பிலான நடவடிக்கைகளில் சுயாதீனத் தன்மையை அரசு அரசியல் மயமாக்குவதற்கு முயற்சித்து வருகின்றது.

இவ்வாறு மத்திய வங்கியின் நாணயமாற்று விடயங்கள் அனைத்தும் தற்போது ஓர் அமைச்சரின் கீழ் கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கொண்டுவரும்பட்சத்தில், பிணைமுறி விவகாரம் போன்று, பல பாரதூரமான மோசடிகள் இடம்பெறக் கூடும்.

நல்லாட்சி அரசு பதவி ஏற்றதும் இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதர் எரிக் சொல்ஹெய்ம் - "இலங்கையின் சிறந்த முதலீட்டாளர்கள் சீனா இல்லை. மாறாக புலம்பெயர் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் பலரின் நிதிகள் வெளிநாடுகளில் உள்ளன. அவ்வாறு இருக்கும் நிதி அனைத்தையும் நாட்டுக்குள் கொண்டு வருவதற்குரிய ஏற்பாடுகளை விரிவாக்க வேண்டும்." - எனத் தெரிவித்திருந்தார்.

அவர் குறிப்பிட்டதைப்போல நாட்டுக்குள் அந்த நிதிகளைக் கொண்டு வருவதற்காக அரசு மத்திய வங்கியின் சுயாதீனத் தன்மையை அரசியல் மயமாக்க முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது. - என்றார் பந்துல. (இ)

## அம்பேத்காரின் பிறந்ததின வாரத்தில் இலவசக் கல்வி நிலையம் ஆரம்பம்

பொன்னாலை - திருவடிநிலை வீதியில்



பொன்னாலை, ஏப்.18

டாக்டர் அம்பேத்காரின் பிறந்ததின நினைவு வாரத்தில், பொன்னாலையில் நேற்று இலவசக் கல்வி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. பொன்னாலை திருவடிநிலை வீதியில் உள்ள கட்டடம் ஒன்றில் வெண்கரம் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த இலவசக் கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

கடற்படையினரின் ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட பொன்னாலையில் மக்கள் மீளக்குடியேறியிருக்கின்ற போதிலும், இங்குள்ள மாணவர்கள் கல்வியில் பெரும் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளனர். மேற்படி மாணவர்களுக்குக் கல்வி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் மேற்படி இலவசக் கல்விச்செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது.

டாக்டர் அம்பேத்காரின் உயரிய சிந்தனைகளுக்கு ஈழத்தில் செயல் வடிவம் கொடுக்கும் நோக்கத்துடன், தாங்கள் இந்த இலசவக்கல்விச்செயற்பாட்டை ஆரம்பித்துள்ளனர் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

நேற்றைய ஆரம்ப நிகழ்வில், வெண்கரம் அமைப்பின் செயற்பாட்டாளர்களான மு.கோமகன், ந.பொன்ராசா, பொன்னாலை சமுர்த்தி உத்தியோகத்தர் ச.சுகந்தன், பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் மற்றும் பொன்னாலையில் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், வெண்கரம் அமைப்பின் ஏனைய செயற்பாட்டாளர்கள், பெருமளவான மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம)

## சாவகச்சேரி இந்துவுக்கு முன்பாக நேற்று புதிய பஸ்தரிப்பிடம் திறப்பு


நாவற்குழி, ஏப்.18

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவன் அமரர் சிவலோகநாதன் ஸ்ரீசங்கரின் ஞாபகார்த்தமாக சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்பாக ஏ-9 பிரதான வீதியில் பஸ் தரிப்பிடமொன்று நேற்றுப் பிற்பகல் 4 மணிக்கு அமரர் ஸ்ரீசங்கரின் தந்தை சிவலோகநாதனால் திறந்து வைக்கப்பட்டது.

இந்தப் பஸ் தரிப்பிடம் அமரர் ஸ்ரீசங்கரின் நண்பர்களான நா. துஷாந்தின் ஏற்பாட்டில் கு.காந்தன், த.தவக்குமார் ஆகியோரின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், அந்தப் பிரதேசமக்கள், உறவினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ம-22)

## மரண அறிவித்தல்



### அமரர் முருகன் ஜீவரத்தினம்

மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரியை நிரந்தர வதிவடமாகக் கொண்ட அமரர் முருகன் ஜீவரத்தினம் அவர்கள் 17.04.2017 நேற்று மாலை 5.30 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகன் சின்னப்பிள்ளை தம்பதியினரின் மூத்த மகனும், சரஸ்வதியின் அன்பு கணவரும், நடசேன், சிவராசன், கிருஸ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திலகம், சாரதா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற குபேந்திரன் (கவி) மற்றும் ஈஸ்வரனின் மாமனாரும், காலஞ்சென்ற நிசாந்தினி மற்றும் உசாந்தினி, நிரோசினி, தினேஸ்வரன், கமல்ராஜ், தனுசன், லக்சன், லக்சியா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
0774795879

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கஸ்தூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சம்பந்தனின் ஆலோசனை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இம்மாத முற்பகுதியில் இளைஞர் விவகார நிகழ்வுக்காகத் திருகோணமலைக்குச் சென்றிருந்தவேளை அங்கு வைத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுடன் முக்கிய கலந்தாலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தியிருக்கின்றனர்.

நாட்டின் ஜனாதிபதியையும் பிரதமரையும் தமது குல தெய்வமான திருகோணமலை ஸ்ரீ ஆதி பத்ரகாளி அம்மன் கோவிலுக்குக் கூட்டிச் சென்று வழிபாடியற்றிய சம்பந்தன், பின்னர் திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் விருந்தினர் இல்லத்தில் இருவருடனும் மந்திராலோசனை நடத்தியிருக்கின்றார்.

ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முக்கிய மூன்று தலைவர்கள் பங்குபற்றிய அக்கூட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனும் இருந்தார் எனத் தெரிகின்றது.

முத்தரப்பினரும் பல விடயங்களை மனம் திறந்து பேசியிருக்கின்றனர் என்ற நல்ல தகவலும் வெளியாகியுள்ளது.

முதலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

*"நாடு எதிர்கொண்டுள்ள மூன்று முக்கிய விடயங்கள் எம் முன்னே உள்ளன. ஒன்று - இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணுதல் உள்ளிட்ட அரசமைப்பு விவகாரம். இரண்டாவது - நாடு எதிர்கொண்டுள்ள மிகமிக மோசமான பொருளாதார நெருக்கடி. மூன்றாவது - நாட்டின் அபிவிருத்தி.*

*"இந்த மூன்றிலும் நாம் காத்திரமான பெறுபேறைக் காட்டி வெற்றிகரமாக விடயங்களை நகர்த்தாவிட்டால், எங்கள் மூவரின் அரசியல் எதிர்காலமுமே கேள்விக்குறியாகி விடும். நாங்கள் மூவரும் தொடர்ந்து அரசியலில் இருப்பதாயின் இந்த விடயங்களைச் சாதித்தாக வேண்டும். இல்லையேல் எங்கள் மக்களே - எங்கள் கட்சியினரே - எங்களை இலகுவாக நிராகரித்து விடுவர்."* - என்ற சாரப்பட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளிப்படையாக முன் வைத்த கருத்தை, ஜனாதிபதியும் ஏற்றுக்கொண்டார் எனத் தெரிகின்றது.

அச்சமயமே வயதில் மூத்த - பழுத்த அரசியல்வாதியான - சம்பந்தன் ஐயா, பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் ஒரு விடயத்தை எடுத்து உரைத்திருக்கின்றார்.

"நீங்கள் இன்று இந்த நிலைக்கு வந்திருக்கின்றமைக்கும் நாட்டின் நீண்டகால இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும் ஒரு வாய்ப்புக் கிட்டியிருக்கின்றமைக்கும் பிரதான காரணம் எதிரெதிர் அணிகளில் - கட்சிகளில் - இருக்கும் நீங்கள் ஒற்றுமைப் பட்டு செயலாற்ற முன்வந்தமைதான். அந்த ஒற்றுமை - ஐக்கியம் - தான் உங்களின் ஒரே பலம்.

*"முதலில் இரண்டு வருடங்கள் ஒன்றிணைந்து செயற்பட இணங்கிய நீங்கள், இப்போது அதனை இந்த அரசின் ஆட்சிக்காலம் வரை - 2020 வரை - தொடர்வதற்கு இணங்கியிருக்கின்றீர்கள். அது நல்லது. நாடு அடைய வேண்டிய இலக்குகளை அடைவதற்கு முன்னர், உங்கள் ஐக்கியத்தை - இந்த இணக்கப்பாட்டை - உடைப்பீர்களாயின் அது உங்கள் இருவரினதும் - இரு தரப்பினரினதும் - எதிர்காலத்துக்கு முடிவுகட்டுவதாகவே அமையும்."* - என்று சம்பந்தன் ஐயா சுட்டிக்காட்டிய போது ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவருமே அதனை அப்படியே ஏற்றுக்கொண்டனராம்.

அதற்கு அப்பால், சம்பந்தன் ஐயா முன்வைத்த ஒரு யோசனை தான் இருவரையும் இன்னும் ஆழமாகச் சிந்திக்க வைத்திருக்கின்றது.

*"இந்த அரசின் ஆட்சிக் காலத்துக்கு மட்டும்தான் இந்த ஐக்கியம் என்ற உங்கள் திட்டத்தை மாற்றி, இரு பெரும் கட்சிகளினதும் இணக்கப்பாட்டுச் செயற்றிட்டம் 2020 ஐயும் தாண்டி, அடுத்த ஆட்சியிலும் தொடரும் என்று அறிவித்துச் செயற்பட்டுப் பாருங்களேன்."* - என்று சம்பந்தன் ஐயா கூறிய ஆலோசனைக்கு, ஜனாதிபதி தரப்பில் இருந்து மிகச் சாதகமாகப் பதில் கிடைத்திருக்கின்றது.

"இது நல்ல யோசனை, இதை முயற்சித்துப் பார்க்கலாம்." - என்ற சாரப்பட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருத்துக் கூறியிருக்கின்றார் என்று அறிய வருகின்றது.

ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ பதில் ஏதும் கூறாமல் - பிரதிபலிப்பு ஏதும் காட்டாமல் - வெறுமனே அந்த யோசனையை செவிமடுத்துக் கொண்டிருந்தாராம்.

பிரதமரின் மௌனத்துக்கு - இணக்கமின்மைக்கு - நியாயமான காரணம் இருப்பதாகத் தெரிகின்றது.

ராஜபக்ஷாக்களின் ஆட்சியை முடிவுறுத்துவதற்காக சுதந்திரக் கட்சியில் மற்றொருவருக்கு - மைத்திரிபால சிறிசேனவுக்கு - நாட்டின் தலைவர் பதவியை 2015 இல் விட்டுக் கொடுத்தாயிற்று. அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அத்தலைமையை ஏற்றுக் கொள்ளவும் இணங்கியாயிற்று. அதற்குப் பின்னர் 2020 தாண்டியும் தொடர்ந்தும் மைத்திரிபால சிறிசேனதான் நாட்டின் தலைவர் என்பதை ஏற்றுக் கொண்டால், தமது ஐ.தே.கட்சி - அல்லது தாம் - நாட்டின் தலைமைப் பதவியை ஏற்பது எப்போது? 1996 இல் தமது கட்சி பறிகொடுத்த நாட்டின் தலைமைப் பதவியை 2025 வரை தொடர்ந்து சு.கவுக்குத் தாரைவார்த்துக் கொடுப்பதா? வாழ்க்கையில் தாம் ஒரு தடவையாவது நாட்டின் தலைவராக வரமுடியாமல் போவதற்கு இணங்குவதா? - இப்படிப் பல நியாயமான கேள்விகள் பிரதமர் ரணில் மனதில் வந்திருக்கும். அதனால், பதில் கூறாமல் - பிரதிபலிப்புக் காட்டாமல் - அவர் மௌனம் காத்திருக்கக் கூடும்.

எது, எப்படியென்றாலும் தம் பதவி, தம் கட்சி, தமது ஆட்சி என்பவற்றைக் கடந்து நாட்டின் நலன் கருதி செயற்படுபவரே அரசியல் வானில் ஒப்புயர்வின்றிப் பேசப்படுவார்.

தமக்கு முன்னால் இருக்கும் தேசிய நெருக்கடிகளை வெற்றிகரமாகத் தாண்டித் தீர்ப்பதற்கு, நாட்டின் தலைவர்களான ஜனாதிபதியும் பிரதமரும் தமது சுய ஆட்சி மற்றும் சுய நலன்களைத் துறந்து, எப்படிச் செயற்படப் போகின்றார்கள்? காலம்தான் பதில் கூறவேண்டும்.

# காணாமற்போனோர் அலுவலகம் நிறுவும் சட்டம் குறித்து ஜனாதிபதி பதிலளிப்பார்

## பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஹெட்டியாராச்சி தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.18

காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவும் சட்டம் தொடர்பில் தாம் எழுப்பிய ஆட்சேபனைகளுக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரைவில் பதில் வழங்குவார் என்று, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவும் சட்ட வரைவு கடந்த ஆண்டு இறுதிப்பகுதியில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்கள் தொடர்பில், குறிப்பாக இராணுவ முகாம்களுக்குள் தேடுதல் நடத்துதல் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக, பாதுகாப்புத் தரப்பினர் ஆட்சேபனைகளை எழுப்பியிருந்தனர்.

காணாமற்போனோர் அலுவலக சட்டத்தில் எந்த விடயங்களில் தமக்கு ஆட்சேபனைகள் உள்ளன என்பதைக் குறிப்பிட்டு 15 பக்கத்திலான ஆவணத்தை மைத்திரிபால சிறிசேனவிடம், பாதுகாப்பு அமைச்சின் செயலர் கையளித்திருந்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் கையளிக்கப்பட்ட ஆவணத்தை - அவர்களின் ஆட்சேபனைகளை அரசதலைவர் நிராகரித்து விட்டார் என்று தெரிய வருகின்றது.

காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவும் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளும் அமைச்சரவைத் தீர்மானம் முன்வைக்கப்பட்டு அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ள திருத்தத்தில், மக்கள் விடுதலை முன்னணியின் திருத்தம் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்தது. வேறு திருத்தங்கள் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. பாதுகாப்புத் தரப்பினரின் ஆட்சேபனைகளை அரச தலைவர் நிராகரித்திருந்தமையாலேயே அந்தத் திருத்தங்கள் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை என்று ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து தெரியவந்தது.

இதுதொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவிக்கையில்-

'அவ்வாறு நிராகரிக்கப்படவில்லை. விரைவில் பதில் வழங்குவதாக ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்துள்ளார்' - என்றார். (எ)

# தீவிரமாகப் பரவும் வைரஸ் காய்ச்சல்; மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு!

## வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, ஏப்.18

நாடெங்கும் தீவிரமாகப் பரவியுள்ள இன்புளுவன்சா வைரஸ் காய்ச்சலுக்கான மருந்துகளுக்கு அரச வைத்தியசாலைகளிலும் தனியார் மருந்தகங்களிலும் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிறு குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் வயோதிபர்களை இலகுவாகத் தாக்கும் இந்த நோய்க்குரிய சிகிச்சைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் அது நிமோனியாக் காய்ச்சலுக்கு வழி வகுப்பதுடன், மரணத்தையும் ஏற்படுத்தும் என்று வைத்தியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வைரஸ் காய்ச்சலுக்கான அத்தியாவசிய மருந்தான 'டெமிப்லு' எனும் மருந்து (கெப்ஸ்யூல்) அரச வைத்திய சாலைகளில் தட்டுப்பாடாக இருப்பதுடன், குறிப்பிட்ட சில தனியார் மருந்தகங்களில் அந்தக் கூட்டுக்குளிகை 600 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

இதன் காரணமாக சாதாரண மக்கள் இந்த மருந்தை தனியார் மருந்தகங்களில் வாங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. எனவே, சுகாதார அமைச்சு இவ் விடயத்தில் உடனடியாகத் தலையிட்டுத் தீர்வொன்றை வழங்க வேண்டும் என்று வைத்தியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் 4 லட்சம் ரூபா கடன் சுமையில்!

## *திஸ்ஸமஹாராமையில் அமைச்சர் சஜித்*



நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் சுமார் 4 லட்சம் ரூபா கடன் சுமை உள்ளதாக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாராமையில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்தகால ஆட்சியாளர்களால் நிர்வகிக்கப்பட்ட நாடு இன்று மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. அனைத்து மக்களும் கடனாளியாகி இருக்கின்றனர். 4 லட்சம் ரூபா என்பது மிகப் பெரிய தொகை ஆகும்.

அம்பாந்தோட்டை மாவட்ட மக்களின் பிரதானமான வீடில்லா பிரச்சினையை நிவர்த்தி செய்ய கடந்த ஆட்சியாளர்களால் முடியாமல் போய்விட்டது. இன்று மீதொட்டமுல்ல சம்பவம் கடந்த காலத்தில் சரியான திட்டமிடலற்ற முறையில் அமைச்சுக்கள் செயற்பட்டமைக்குச் சிறந்த உதாரணம் ஆகும்.

எனினும், அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கு விஜயம் செய்த பின்னர், மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்க விருப்பம் வெளியிட்டுள்ளனர். - என்றார். (எ)



வீதி விபத்துக்களைத் தவிர்ப்போம்!

கவனமில்லாது வீதியில் இறங்க வேண்டாம்!

பல உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்படுகின்றன, பல பிள்ளைகள் தம் தந்தையரை இழக்கின்றனர், பலர் விதவைகளாகின்றனர், பலர் தம் பிள்ளைகளை இழக்கின்றனர், அங்கவீனம் மற்றும் இறப்புகள் பலப்பல, சொத்து இழப்புகள் பல, மருத்துவ சேவை விரயமும் அதிகம்.

தகவல் : சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை/ மாநகரசபை, யாழ்ப்பாணம்.

### நாளை

19.04.2017
புதன்கிழமை

நட்சத்திரம்: உத்தரம் மு.இ. 9.08 வரை
திதி : அட்டமி மு.இ. 12.42 வரை

சுபநேரம் : 4.32 – 6.02 வரை
இராகுகாலம் : 12.02 – 1.32 வரை

# மறுக்கப்பட்ட உரிமைகளை வலியுறுத்தி உரக்கக் குரல் கொடுக்க ஒன்றிணைவோம்

## கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசிய மே தின ஒழுங்கமைப்புக் குழு அழைப்பு

மறுக்கப்பட்ட உரிமைகளை வலியுறுத்தி உரக்கக் குரல் கொடுக்க ஒன்றிணைவோம் என்பதை வெளிப்படுத்தும் தமிழ்த் தேசிய மே தின நிகழ்வு கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட உள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை வேண்டியும் தொழிலாளர் உரிமையை வலியுறுத்தியும் இந்த நிகழ்வு இம்முறை இடம்பெறவுள்ளது.

இதுதொடர்பில் கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசிய மே தின ஒழுங்கமைப்புக்குழு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

உரிமைகளை வலியுறுத்தி கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றிலில் இருந்து ஆரம்பமாகும் தமிழ்த் தேசிய மே-நாள் ஊர்வலம் ஏ-9 வீதி வழியாக கிளிநொச்சி டிப்போச் சந்தியைச் சென்றடைந்து ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் மே தின நிகழ்வுகள் மிகவும் உணர்வெழுச்சியுடன் நடைபெறவுள்ளன.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டு உரிமை மறுக்கப்பட்ட தொழிலாளர் குடும்பங்களின் உரிமையை வலியுறுத்தியும், விசாரணைகள் எவையும் இன்றி வெறும் சந்தேகநபர்கள் என்று கூறி நீண்டகாலமாக சிறைகளில் வாடும் தொழிலாளர்களின் விடுதலையை வலியுறுத்தியும், தொழிலாளர்களது விவசாய நிலங்கள், குடியிருப்பு நிலங்கள், தொழில் மையங்கள் என்பனவற்றை அபகரித்துள்ள இராணுவத்தினரை வெளியேற்றுமாறு கோரியும்-




பூநகரிப் பிரதேசங்களிலுள்ள கடல் தொழில் வளங்களை அபகரித்துள்ள கடற்படையினரை வெளியேற்றி சுதந்திரமாகத் தொழில் செய்ய அனுமதிக்குமாறு வலியுறுத்தியும் என இன்னும் பல உரிமை மறுப்புக்களுக்கு எதிராகக் குரல்கொடுத்து உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உரிமைகளை வலியுறுத்த ஒன்றிணையும் தமிழ்த் தேசிய மே நாளில் தொழிலாளர்கள், பொது அமைப்புக்கள், மக்கள், மக்களின் உரிமைக்காகப் போராடும் அரசியல் பிரமுகர்கள் என அனைவரும் கலந்து கொண்டு உரிமைகளை வென்றெடுக்கப் பலம் சேர்க்க வேண்டும்.

இந்த மே தின நிகழ்வுகளில் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பொது அமைப்புக்கள், மக்கள் எனப் பெருமளவானவர்கள் உரிமைக்காக ஒன்றிணைந்து குரல் கொடுக்கவுள்ளனர்.- என்றுள்ளது. (எ)

## தென்மராட்சியில் தொழிற்கல்விக்கு நேர்முகத் தேர்வு

தென்மராட்சி, ஏப்.18

மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இளைஞர் யுவதிகளுக்குத் தொழிற்கல்வி மற்றும் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான நேர்முகத்தேர்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நேர்முகத் தேர்வு நடைபெறும். தகைமைகளுக்கேற்ப விரும்பிய துறையில் விரும்பிய தொழில் ஒன்றைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பும் வழங்கப்படும். தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ்கள், மற்றும் சுயவிவரக் கோவையுடன் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-21)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஏப்.18

வடக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பான அவசர கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள தனியார் கல்வி நிலையத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு வடக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார். (ச)

## தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.18

புதுவருடத்தை முன்னிட்டு யாழ். மாவட்டச் செயலகத்தால் பிரதேச செயலக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு ஆளுநரால் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பழைய பூங்காவில் அமைந்துள்ள ஆளுநர் செயலகத்தில் இடம்பெறும். (ச)

## கிணற்றுக்குள் விழுந்த யானைகள்: காப்பாற்றியவர்களையே தாக்கின!


துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு யானை பலி!!

வவுனியா, ஏப்.18

வவுனியா - ஓமந்தை, கொம்பு வைத்தகுளம் பகுதி கிணற்றுக்குள் வீழ்ந்த 4 யானைகள் காப்பாற்றப்பட்டுள்ளன. அதேவேளை காப்பாற்றியோரை யானைக் குட்டி ஒன்று தாக்கியுள்ளது.

இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது.

கொம்புவைத்தகுளம் பகுதியில் 4 யானைகள் கிணற்றில் வீழ்ந்துள்ளன என்று ஓமந்தை பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கப்பெற்றது.

அதற்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், வனவிலங்கு ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

எனினும் மாலை 4 மணிக்குப் பின்னரும் வன விலங்கு ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு சமுகமளிக்காத காரணத்தால், பொதுமக்களின் உதவியுடன் ஓமந்தைப் பொலிஸார் சுமார் 5 மணித்தியாலங்களாக போராடி 2 குட்டி யானைகளையும் மீட்டுள்ளனர்.

இவ்வாறு யானைக் குட்டிகள் மீட்கப்பட்ட போதும், யானைக் குட்டி ஒன்று அவ்விடத்தில் நின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களையும் பொது மக்களையும் தாக்கியுள்ளதுடன் இதன் போது இருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

எனினும் தொடர்ச்சியாக மீட்புப்பணியைத் தொடர முடியாமையால் நேற்றுக் காலை 2 பெரிய யானைகளையும் மீட்கும் பணி முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் மேலும் இரண்டு யானைகளும் மீட்கப்பட்ட போதிலும், அவை அதிகாரிகளை துரத்தியதால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் யானை ஒன்று உயிரிழந்தது. மற்றைய யானை கடும் போராட்டத்தின் மத்தியில் மீட்கப்பட்டு காட்டுக்குள் விரட்டியடிக் கப்பட்டது. (எ-100)

## புதுக்குடியிருப்பு சந்தைகளில் சுகாதாரக் கேடு; அங்கு செல்வதற்கு பொதுமக்கள் தயக்கம்!



முல்லைத்தீவு, ஏப்.18

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பின் மீன் சந்தை, இறைச்சி சந்தை போன்ற இடங்களில் சுகாதாரச் சீர்கேடு நிலவுகின்றது. இதனால் அங்கு மீன், இறைச்சி வாங்குவதற்கு மக்கள் தயக் கம் காட்டி வருகின்றனர்.

அந்தச் சந்தையில் சில இடங்களில் கழிவு நீர் தேங்கி நிற்பதனால் துர்நாற்றம் வீசுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி எம். கெங்காதீஸ்வரன் தெரிவிக்கையில் -

'இதுதொடர்பாக பல தட வைகள் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு வலியுறுத்தியும் எந்த நட வடிக்கையும் எடுக்கப்படவில்லை.' என்றார்.

இதேவேளை மேலும் இது தொடர்பாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ஜெயராஜ் கருத்து வெளியிடுகையில், உரிய காலப்பகுதிக்குள் இதனைச் சீர்செய்து தருவதாகப் பதிலளித்துள்ளார். (எ)

## தாண்டிக்குளம் கந்தசுவாமி ஆலய உண்டியலை உடைத்தனர் திருடர்கள்

வவுனியா தாண்டிக்குளம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய உண்டியல் நேற்று முன்தினம் உடைக்கப்பட்டு பெருமளவு பணம் அபகரிக்கப்பட்டதுடன் அங்குள்ள ஒலிபெருக்கியும் திருடப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் ஆலயம் மூடப்பட்டுள்ளது. நேற்றுக் காலை ஆலயத்தைத் திறப்பதற்காகச் சென்றிருந்த போது ஆலயம் உடைக்கப் பட்டிருந்தமை தெரியவந்தது.

அதன்பின் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஆலயத்துக்குச் சென்ற பொலிஸ் குழுவினர் ஆலய நிர்வாக சபையினிடமும், ஆலய குருக்களிடமும் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

இதன்போது ஆலய மூலஸ்தானம் கத்தி கொண்டு உடைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டமை தெரியவந்துள்ளதுடன் ஆலயத்தின் அலுவல கத்தை திருடர்கள் உடைத்து, அலுமாரியிலிருந்த ஒலி பெருக்கிச் சாதனத்தை எடுத்துச் சென்றுள்ளனர்.

மேலும் ஆலய முன்றிலிலிருந்த உண்டியலும் உடைக்கப்பட்டு அதிலிருந்த பணமும் திருடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (எ-100)

## மின்சாரக் கட்டண பற்றுச்சீட்டுக்கள் வழங்கவில்லை விசனம் தெரிவிக்கும் கிளிநொச்சி மாவட்ட மக்கள்

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் கடந்த பல மாதங்களாக மின்சார கட்டண பற்றுச்சீட்டு வழங்கப்படவில்லை என்று பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதனால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் என்று விசனம் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சியில் கட்டம் கட்டமாக மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட பின்னர் அப்போதைய மஹிந்த ராஜபக்ஷ அரசால் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு இலவச மின்சாரம் வழங் கப்பட்டது.

எனினும், அந்தக் காலப்பகுதி நிறைவுற்றதும் வழமை போன்று கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கும் மின்சாரக் கட்டணம் அறவிடப்பட்டுவந்தது.

எனினும், கடந்த 6 மாதங்களுக்கும் மேலாக மின்மானி வாசிப்பாளர் தமது பகுதிகளுக்கு விஜயம் செய்வதில்லை என்றும் தமக்கான மின் கட்டண பற்றுச்சீட்டு வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ள மக்கள், இதற்கான தீர்வு என்ன என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.


அத்துடன் எதிர்வரும் காலத்தில் தமக்கான மின்சார இணைப்பு துண்டிக்கப்படுமா என்று அச்சம் வெளியிட்டுள்ள மக்கள், கடந்த காலங்களில் வழங்கப்படாத மின் கட்டணபட்டியல் ஒரே தடவையில் வழங்கப்பட்டால் அதற்கான கட்டணத்தை எவ்வாறு செலுத்துவது என்றும் கலக்கமடைந்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட மின்சார சபை அதிகாரிகள் தெரிவிக்கையில் -

'மின்சாரசபை அலுவலகத்தில் ஆளணிப்பற்றாக் குறை காணப்படுகின்றது. இதனாலேயே இந்தப்பணிகளை நிறைவேற்ற முடியவில்லை' என்று பதிலளித்துள்ளனர். (எ)

# கடந்த காலப் படிப்பினைகளை வைத்து தற்போது அரசியல் செய்ய வேண்டும்!

## ஸ்ரீநேசன் எம்.பி. தெரிவிப்பு



அக்கரைப்பற்று,ஏப்.18

நாம் கடந்த கால படிப்பினைகளை வைத்தே, தற்போது அரசியல் செய்ய வேண்டும். அன்று அஹிம்சை மற்றும் ஆயுத ரீதியான போராட்டங்களில் ஏற்பட்ட அனுபவங்களை வைத்துக் கொண்டு தற்போதைய சூழ்நிலையில் அரசியலைக் கொண்டு நகர்த்தக்கூடிய தேவை எழுந்துள்ளது.

-இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு கலாசார மண்டபத்தில் நடந்த மேதினம் தொடர்பான நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வாயால் பேசி வாயால் அரசியல் செய்ய முடியாது. மாறாக இது மூளையால் சிந்தித்து வாயால் அரசியல் பேசவேண்டிய காலகட்டம் ஆகும். இதனைத்தான் நாங்கள் தற்போது செய்து கொண்டு வருகின்றோம்.

அதைவிடுத்து யாரும் திணிக்கும் கருத்துக்களை வைத்துக்கொண்டு அரசியல் செய்ய முடியாது. இதனைத் தமிழ் மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும் .

சிலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் குழப்ப நினைக்கின்றார்கள். அவர்களது பேச்சுக்குப் பின்னால் செல்லும் கட்சியல்ல கூட்டமைப்பு .

இதேவேளை, கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் மூன்று மாவட்டங்களிலும் குறைவான விகிதாசாரத்தில் தமிழர்கள் உள்ள மாவட்டமாக அம்பாறை உள்ளது. இந்த மாவட்டம் போராட்ட காலத்தில் பல பங்களிப்பை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த மாவட்டத்திலேயே இம்முறை மே தினத்தைக் கொண்டாடுவதற்கான முடிவு எமது கட்சியால் எடுக்கப்பட்டிருக்கிறது.

இங்குள்ள தொண்டர்கள் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட்டு மே தினத்தைச் சிறப்பான முறையில் நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். -என்றார். (ச)

## மட்டு. மாவட்ட பட்டதாரிகள் மீது தாக்குதல் முயற்சி!

மட்டக்களப்பு, ஏப்.18

மட்டக்களப்பில் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்திவரும் பட்டதாரிகள் மீது தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இருவர் தாக்குதல் நடத்த முற்பட்டனர் என மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மதுபோதையில் வந்து இருவர் இரவு தகாத வார்த்தைகளால் திட்டி, தாக்குவோம் என எச்சரித்து விட்டு, மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்றனர். எமது போராட்டத்துக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியாத சில அரசியல் வாதிகள் தங்களது அடிவருடிகள் மூலம் அச்சுறுத்தல் விடுக்கின்றனர் என பட்டதாரிகள் மேலும் தெரிவித்தனர்.

தொழில் உரிமையை வழங்குமாறு மத்திய மாகாண அரசுகளை வலியுறுத்தி மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் நேற்றுடன் 56 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அலையில் சிக்கி மாணவன் உயிரிழப்பு!

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கர்பலாக் கடலில் நீராடிக்கொண்டிருந்த மாணவன் ஒருவர் அலையில் சிக்கி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை உயிரிழந்தார்.

ஆரையம்பதிபழைய கல்முனையைச் சேர்ந்த, வீரசிங்கம் தர்மதன் (வயது-17) என்ற மாணவனே உயிரிழந்தவர் ஆவார்.

## கர்ப்பிணிப் பெண்ணின் மரணத்தில் சந்தேகம்!

ஏறாவூர்,ஏப்.18

மட்டக்களப்பு - ஏறாவூர் பொலிஸ் பிரிவில் உயிரிழந்த பெண் ஒருவரின் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது, அந்தப் பெண்ணின் வயிற்றில் 4 மாத பெண் சிசு ஒன்று உயிரிழந்த நிலையில் காணப்பட்டமை தெரிய வந்துள்ளது.

திடீரென மரணமடைந்த இரண்டு பிள்ளைகளின் தாயான 28 வயது பெண்ணொருவரின் உடற்கூற்றுப் பரிசோதனை நேற்றுத் திங்கட்கிழமை மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே பெண்ணின் வயிற்றில் 4 மாதங்களேயான பெண் சிசு இறந்த நிலையில் இருப்பது தெரியவந்துள்ளது. மேலும், அந்தப் பெண்ணுக்கு அதிக இரத்தப் போக்கு ஏற்பட்டிருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

பிரஸ்தாபப் பெண்ணின் உறவினர்கள் அளித்த வாக்கு மூலத்தில் முன்னுக்குப்பின் முரண்பாடுகள் காணப்பட்டமையால் தடயவியல் நிபுணர்களின் அறிக்கையைப் பெறவும் இறந்த பெண்ணின் உடல் மாதிரிகளை இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது என மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நஸீர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பெண்ணின் கணவர் தற்போது மத்திய கிழக்கு நாடு ஒன்றில் தொழில் புரிந்து வருகிறார் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ச)



## டைனமைட்டுகளுடன் ஒருவர் கைதானார்!

திருகோணமலை,ஏப்.18

கிண்ணியா பைஷால் நகரில் 55 டைனமைட் குச்சிகளையும், 138 கிராம் வெடிமருந்தையும் ஓட்டோவில் கொண்டு சென்ற 45 வயதுடைய நபர் ஒருவரை நேற்றுத் திங்கட்கிழமை பொலிஸார் கைதுசெய்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த ரகசியத் தகவலை அடுத்து, மேற்படி ஓட்டோவைச் சோதனை செய்த போதே, இந்த வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட நபரையும், அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வெடிமருந்துகளையும் கிண்ணியா பொலிஸாரிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் ஒப்படைத்துள்ளனர். கைப்பற்றப்பட்டுள்ள வெடிமருந்தின் பெறுமதி 38 ஆயிரத்து 500 ரூபா ஆகும். இது தொடர்பான மேலதிக விசாரணை களைக் கிண்ணியாப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)

## மட்டக்களப்பு அரசியல்வாதிகள் முதுகெலும்பு இல்லாதவர்கள்!

### பிள்ளையான் தெரிவிப்பு

மட்டக்களப்பில் உள்ள அரசியல்வாதிகள் முதுகெலும்பு இல்லாதவர்கள் எனதமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின்தலைவரும்கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று திங்கட்கிழமை ஆஜர் படுத்தப்பட்ட அவர் மீண்டும் சிறைக்கு கொண்டு செல்லப்பட்ட போதே ஊடகவியலாளர்களிடம் இந்தக் கருத்தைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்:-

கல்குடாவில் மதுபான உற்பத்தி நிலையம் இன்னும் மூடப்படவில்லை. கிழக்கு மாகாண முதலமைச்சர் நீதித்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்போகின்றேன் என்று கூறினார். ஆனால், இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மேலும், மதுபான உற்பத்தி நிலையம் பிராந்திய பிரதேச சட்டத்தை மீறிய செயற்பாடாகும். அதனை நன்றாக தெரிந்து கொண்டும் அதனை நிறுத்த முடியாமல் இருப்பது கவலைக்குரிய தாகும் . -என்றார். (ச)

## குளவி கொட்டியதில் மூன்று பேர் பாதிப்பு!

திருகோணமலை மயிலக்குடாவெளி பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் நேற்றுத் திங்கட்கிழமை காலை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

தந்தை, தாய் மற்றும் மகன் ஆகிய மூவரும் வீட்டுக்குப் பின்புறமாக இருந்த வளாகத்தில் காணப்பட்ட புளியமரத்தை வெட்டிக்கொண்டிருந்தனர். அப்போது, அம்மரத்திலிருந்த குளவிக்கூடு உடைந்த நிலையில் கலைந்துவந்த குளவிகள் இவர்களை மாறி மாறி கொட்டியுள்ளன.

உடனடியாக மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர்கள், மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ச)

## பிள்ளையானுக்கு மறியல் நீடிப்பு!



மட்டக்களப்பு,ஏப்.18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவருமான பிள்ளையான் உட்பட நால்வருக்கும் எதிர்வரும் 28 ஆம் திகதிவரை மறியல் உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் பதில் நீதிவான் நீதிபதி எம்.றிஸ்வி முன்னிலையில் நேற்று திங்கட்கிழமை இவர்களை ஆஜர் படுத்தியபோதே, இவர்களுக்கான விளக்கமறியல் உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. (ச)

## டிப்பருடன் ஓட்டோ மோதி விபத்து: சாரதி உயிரிழப்பு; மூவர் படுகாயம்!

ஏறாவூர்,ஏப்.18

ஏறாவூர்- அளவ்வை பகுதியில் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 4 மணியளவில் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனத்துடன் ஓட்டோ மோதி விபத்துக்குள்ளானதில், ஒருவர் உயிரிழந்தார்; மூவர் படுகாயமடைந்தனர்.

ஏறாவூர் வாளியப்பா தைக்கா வீதியைச் சேர்ந்த ஓட்டோ சாரதியான எம். எச். முஹம்மட் முஸம்மில் (வயது-44) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

விபத்தில் ஓட்டோவில் பயணம் செய்த ஏறாவூர் காதியார் வீதியைச் சேர்ந்த முஹம்மட் நழீம், முஹம்மட் உவைஸ், உவைஸின் மனைவி ஆகியோர் காயங்களுக்குள்ளாகி குருநாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஏறாவூரில் இருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் வழியிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது. (ச)

# மீதொட்டமுல்ல குப்பை மேட்டுக்குள் 100 பேர் புதையுண்டிருக்கலாம்!

## அனர்த்தத்துக்கு முன் நாய்கள் குரைத்து முன்னெச்சரிக்கை ஆனால் அதனை புரிந்து கொள்ளவில்லை பிரதேச மக்கள்

கொழும்பு, ஏப். 18

கொலன்னாவ- மீதொட்ட முல்லவில் கடந்த வெள்ளிக்கிழமை 300 அடி உயரமான குப்பைமேடு வீடுகளுக்கு மேல் சரிந்து வீழ்ந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 26 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, இந்த விபத்தில் 100 பேர் வரையில் தமது வீடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் என்று ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு இடைநிறுத்தப்பட்ட மீட்புப் பணிகள் நேற்றுக் காலையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**தொடர்கிறது மீட்புப் பணி**

மீட்புப் பணிகளில் இராணுவம், சிறப்பு அதிரடிப்படை உள்ளிட்டவற்றை சேர்ந்த 100 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனினும், குப்பைக்குள் புதைந்துபோனவர்களை உயிருடன் மீட்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனிவிரத்ன தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் காணாமல் போனவர்கள் பற்றிய சரியான எண்ணிக்கையை உறுதி செய்வதில் அதிகாரிகள் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த அனர்த்தத்தில் 80 வீடுகள் முற்றாகவே குப்பை மேட்டுக்குள் புதைந்துள்ளன. மேலும் 36 வீடுகள் பலத்த சேதமடைந்தன.



ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியீடு

இதனிடையே, மீதொட்ட முல்லவில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்புப் பணிகள் இன்னும் 72 மணித்தியாலங்களில் முடிவடையும் என்று இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

**இன்னுமொரு அழிவு ஏற்படும் அபாயம்**

குப்பைமேட்டில் இன்னொரு சரிவு இடம்பெறுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றமையால், சிறப்பு நிபுணர்கள் குழுவொன்று அங்கு நிறுத்தப்பட்டுள்ளது. மீட்புப் பணிகளில் 30இற்கு மேற்பட்ட அகழ்வு இயந்திரங்கள் பயன்படுத்தப் படுகின்றன.



மீதொட்டமுல்ல அனர்த்தம் தொடர்பில் அந்தப் பிரதேசத்தில் இருந்த நாய்கள் முன்கூட்டியே தெரிந்து கொண்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரதேசத்தில் வாழ்ந்து வந்த மக்கள் இதனைத் தெரிவித்துள்ளனர். அனர்த்தம் ஏற்படுவதற்கு முன்னதாக நாய்கள் பெரும் சத்தத்துடன் குரைத்துள்ளன. ஆனால், அவை இவ்வாறான பெரிய அனர்த்தம் ஏற்பட உள்ளது என்பதற்காகத்தான் குரைக்கின்றன என்பதை நாம் உணர்ந்து கொள்ளவில்லை.

**சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்ப முயன்ற நாய்கள்**

அத்துடன், நாய்கள் அந்த இடத்தை விட்டு வெளியேறிச் சென்றுள்ளன. சங்கிலியால் கட்டப்பட்டிருந்த நாய்கள் கூட அவற்றை அறுத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு வெளியேற முயற்சித்துள்ளன.

குப்பை மேடு சரிந்து வீழ்ந்து சில மணித்தியாலங்களின் பின்னர் மீளவும் நாய்கள் அந்த இடத்திற்கு வந்தன என்றும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, மீதொட்ட முல்லவில் ஏற்பட்ட அனர்த்தம் குப்பை மேடு சரிவு என கூறப்பட்ட போதிலும், அது பெரும் மண் சரிவை போன்றதொரு நிலைமை என புவியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கழிவு மலைகள் உடைந்து விழுவதென்பது இயற்பியல் அடிப்படையில் இடம்பெறும் என்ற போதிலும், இது மண சரிவின் உள் பகுதியில் ஏற்படும் உயிர்வேதியியல் நடவடிக்கை என அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

**அடிஸ் அபாபாவிலும் இவ்வாறான ஒரு சம்பவம்**

இவ்வாறு குப்பை மேடுகளில் மண் சரிவு ஏற்படுவதென்பது உலகின் பல்வேறு நாடுகளில் இடம்பெற்ற சம்பவங்களாகும். இறுதியாக இவ்வாறான பெரும் சம்பவம் ஒன்று கடந்த மார்ச் மாதம் 12ஆம் திகதி எத்தியோப்பியாவின் தலை நகரமான அடிஸ் அபாபா நகரத்தில் இடம்பெற்றுள்ளது. இந்த அனர்த்தத்தில் 113 பேர் உயிரிழந்துள்ளனர்.

எப்படியிருப்பினும் இந்த குப்பை மேட்டுக்கு அருகில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீண்டும் இவ்வாறான வெடிப்பு அல்லது மண்சரிவு ஏற்படக் கூடிய வாய்ப்புகள் உள்ளன என்றும் புவியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இது தொடர்பில் இந்த நாட்டின் பலர் அறியாமையுடன் இருக்கின்றமையே ஆபத்தை அதிகரிப்பதற்கான காரணம் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## கட்டுநாயக்க விமான நிலைய காணிகளும் இனி குத்தகைக்கு!

### வழங்கத் தயாராகிறது அரசு

கொழும்பு, ஏப். 18

கட்டுநாயக்க பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையம் அமைந்துள்ள காணியின் இரண்டு பகுதிகளை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தப் பகுதியில் 100 அறைகளைக் கொண்ட 2 நட்சத்திர ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் தனியார் நிறுவனங்களுக்கு இந்தக் காணிகளைக் குத்தகைக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தைப் பயன்படுத்தும் விமானப் பயணிகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. இதன் காரணமாக பயணிகளின் தங்குமிட வசதிகளை முழுமைப்படுத்துவதற்காக அரசாங்கம் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

விமான நிலையம் மற்றும் விமான சேவை நிறுவனத்திற்குச் சொந்தமான இந்த இடத்தை 40 வருட குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரைக்கமைய இந்த இரண்டு ஹோட்டல்களையும் நிர்மாணிப்பதற்காக தனியார் நிறுவனங்கள் இரண்டு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## குப்பைகளை அகற்றுவது தொடர்பில் மக்களின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை!

கொழும்பு, ஏப். 18

குப்பைகளை அகற்றுவது தொடர்பில் மக்களின் ஒத்துழைப்பு உரிய முறையில் கிடைக்கவில்லை என மேல் மற்றும் பெருநகர அபிவிருத்தி அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிவு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

குப்பை அகற்றல் முகாமைத்துவத்தை உரிய முறையில் மேற்கொள்ள முடியாமைக்கு மக்களின் எதிர்ப்பே பிரதான காரணமாகும்.

கொழும்பின் குப்பைகள் எமக்கு வேண்டாம் என்ற கோஷத்தால் இவ்வாறான அனர்த்தங்களை மட்டுமே ஏற்படுத்த முடியும்.

மீதொட்டமுல்ல குப்பை மேடு ஆபத்தானது, அந்தப் பகுதியில் குப்பை போடக் கூடாது என கடந்த பெப்ரவரி மாதம் அமைச்சரவையில் ஒரு யோசனை முன்வைக்கப் பட்டது. அதற்கு அமைச்சரவையின் அனுமதியும் கிடைக்கப் பெற்றது.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மீதொட்ட முல்ல குப்பை மேடு சரிவு காரணமாக ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்யும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று உள்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு மாவட்டச் செயலகம் மற்றும் கொலன்னாவ பிரதேச பொதுச்செயலக காரியாலயம் ஆகியன இந்தப் பணிகளை முன்னெடுக்கவுள்ளன.

## விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் தலைவர் இலங்கையில் உள்ளாராம்!

### சிங்கள ஊடகம் கூறுகிறது!

கொழும்பு, ஏப். 18

தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட புலனாய்வுப் பிரிவுத்தலைவர்களில் ஒருவர் படகு மூலம் இலங்கைக்குள் பிரவேசித்துள்ளார் என்று சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த ஊடகம் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

மட்டக்களப்பு சந்திவெளி பகுதியில் புலிகளின் புலனாய்வுப் பிரிவுத் தலைவராகவும், ஜெயந்தன் படையணியின் தலைவர்களில் ஒருவராகவும் கடமையாற்றிய ஜெயந்தன் எனப்படும் மோகனதாஸ் என்பவரே இவ்வாறு சட்ட விரோதமாக நாட்டுக்குள் பிரவேசித்துள்ளார்.

கடந்த வாரம் மீனவ படகு ஒன்றின் ஊடாக மன்னார் பிரதேசத்திற்கு இவர் வருகை தந் துள்ளார். இறுதிக்கட்டப் போரின் போது இந்தியாவுக்ுச் சென்றிருந்த ஜெயந்தன், அங்கிருந்து லண்டன் சென்றிருந்தார்.

அவரது மனைவியும் இறுதி செயற்பாட்டின் போது இந்தியாவுக்கு சென்றுள்ள நிலையில் அவர் தற்போது பிள்ளைகளுடன் இந்தியாவில் வாழ்ந்து வருகிறார்.

இறுதிக்கட்டப் போரின் போது இராணுவத்தினருக்கு பலத்த எதிர்ப்பைக் காட்டிய படையணிகளில் ஜெயந்தன் தலைமையிலான படையணி முக்கியமானதாகும்.

ஜெயந்தன் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்தியா ஊடாக மன்னாருக்கு வந்து சென்றுள்ளார்.- என்றும் ஊடகச் செய்தி கூறுகிறது.

# வீதி விபத்துகளில் சிக்கி 665 பேர் கொழும்பு வைத்தியசாலையில்!

கொழும்பு, ஏப்.18

புதுவருட காலத்தின் போது 13, 14 மற்றும் 15ஆம் திகதிகளில் பல்வேறு விபத்துகளில் சிக்கிய 665 பேர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மருத்துவமனையின் நிறைவேற்றுப்பணிப்பாளர் அனில் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருடத்தில் விபத்துகளின் எண்ணிக்கை பெரியளவில்குறைவடைந்துள்ளன என்று நேற்றுமுன்தினம் அவர்வெளியிட்டுள்ளஅறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த வருடத்தில் குடி போதை காரணமாகவே அதிகளவான விபத்துகள் இடம் பெற்றிருந்தன. ஆனால், இந்த வருடம் கணிசமான அளவு குறைவடைந்துள்ளது. எனினும் இந்த வருடம் அதிக வேகத்தில் பயணித்தவர் களே விபத்துக்குள்ளாகியுள்ளமை பதிவாகியுள்ளது.

புத்தாண்டையொட்டிபொலிஸாரால் ஏற்படுத்தப்பட்டிருந்த விசேட போக்குவரத்து நடைமுறைகள் விபத்துகளைக் கட்டுப் படுத்தி இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.-என்றார்.(எ)

# சார்ஜாவில் இலங்கைப் பெண் கொலை: சந்தேகத்தில் இலங்கையர் ஒருவர் கைது!

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் சார்ஜா நகரில் இலங்கைப் பெண்ணொருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் சார்ஜா பொலிஸாரால் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என்று அந்த நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

28 வயதான அந்த இலங்கைப் பெண் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டிருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் 38 வயதான இலங்கை நாட்டவர் ஒருவரே கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்ற 8 மணித்தியாலங்களுள் சந்தேகநபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை சார்ஜா பொலிஸார் முன்னெடுத்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கொலை செய்யப்பட்ட பெண்தகாத உறவுகளைக் கொண்டிருந்தார்என்று பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

எனினும், கொலைக்கான சரியான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

சார்ஜா நகரில் அவர் பணிபுரிந்தார். அவரது வீட்டில் நீச்சல் தடாகத்துக்கு அருகில் கடந்த 14ஆம் திகதி கொலை செய்யப்பட்ட நிலையில் அந்தப் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டிருந்தது. இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்ற பகுதியில் இரகசியப்பொலிஸார்விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

அதேவேளை, கொலை செய்யப்பட்ட இடத்தில் காணப்பட்ட கைவிரல் அடையாளங்களைக் கொண்டு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபரி டம் அந்தநாட்டுபொலிஸார்தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

## தினசரி ராசி பலன் 18.04.2017

**ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 5 ஆம் நாள் ஸப்தமித்திதி பி.இ. 2.37 மணி வரை. பின்னர் அஷ்டமி. நட்சத்திரம்: பூராடம் இரவு 10.10 மணி வரை. பின்னர் உத்தராடம். மரணயோகம் முழுவதும். ராகுகாலம்: பிற்பகல் 3.14 மணி முதல் 4.47 மணி வரை. சுபநேரம்: பகல் 10.30 மணி முதல் 12.00 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி: சித்திரைமாத தேய்பிறை ஸப்தமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: பூராடம்.**

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** நன்மையான நாள். பணவரவு அதிகரிக்கும். வர்த்தகர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுகளும் பதவிப் பொறுப்புகளும் அதிகரிக்கும்.

**ரிஷபம்:** யோசனையான நாள். திடீர்ச் செலவுகளால் வருமானம் பற்றாக்குறையால் கடன் தொல்லை அதிகரிக்கும். உத்தியோகத்தர் சிலருக்கு பதவியிழப்புகள் ஏற்படும்.

**மிதுனம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. தொழிலில் அலைச்சலும் விரக்தியும் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புகள் அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கலைத் தவிர்க்கவும்.

**கடகம்:** இன்பமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளும், வருமானமும் அதிகரிக்கும்.

**சிம்மம்:** இணக்கமான நாள். வர்த்தகர்களுக்கு புதிய முதலீடுகளுக்கு உகந்த நாள் ஆகும். தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளும், முதலாளிகளின் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

**கன்னி:** சலனம் மிகுந்த நாள். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளுவும், பொறுப்புகளும் அதிகரிக்கும். திருமணப் பேச்சுகள் தடை, தாமதமாகும்.

**துலாம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். செய்தொழில் விருத்தி குறையும்.

**விருச்சிகம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வித் தேர்ச்சி திருப்தி தரும்.

**தனுசு:** அதிஷ்டமான நாள். தனலாபம் பெருகும். தாய் வழிச் சொத்துகள் வந்துசேரும். வேலை வாய்ப்புகள் வலிய வரும். பெண்களின் விவாகப் பேச்சுகள் சுபமாய் முடியும்.

**மகரம்:** குழப்பமான நாள். குடும்பச் செலவுகள் அதிகரிப்பால் வருமானம் குறையும். கடன்பட நேரும். குடும்பங்களுக்கிடையில் பிணக்குகளும், சச்சரவுகளும் அதிகரிக்கும்.

**கும்பம்:** மேன்மையான நாள். பொருளாதாரம் மேன்மை அடையும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்ச்சியும், மன நிறைவான இடமாற்றமும் கிடைக்கும். வேலையற்றோருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

**மீனம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. விவசாயத்தில் பெரிய நஷ்டம் உண்டாகும். வாகனத்தில் பயணம் செல்லும்போது அவதானம் தேவை.

சந்திராட்டமநாள்: கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆகிய நட்சத்திரத்தினர் இன்று நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# நுரைச்சோலை மின்நிலையத்தில் கோளாறு; சில பகுதிகளில் நேற்று திடீர் மின்தடை!

கொழும்பு, ஏப்.18

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் உள்ள முதலாவது மின் பிறப்பாக்கியில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நாட்டின் பல பிரதேசங்களில் நேற்று அதிகாலை திடீர் மின்சார தடை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக மின் விநியோகத்தை சமச்சீராக்குவதற்காக சில பகுதிகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக மின்சக்தி மற்றும் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலஷன ஜயவர்தன கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இரத்தினப்புரி, மத்துகம, கொஸ்கம மற்றும் பாணந்துறை ஆகிய பகுதிகளில் கீறீட் உப மின் நிலையங்களூடாக முன்னெடுக்கப்படும் மின்சார விநியோகமே துண்டிக்கப் பட்டது.

எனினும் மின்சார விநியோகம் வழமைக்குதிரும்பியுள்ளதாகவும் செயலிழந்து மின் பிறப் பாக்கியில் திருத்தப் பணிகள் நிறைவு செய் யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை கடந்த வருடத்திலும் நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நாட்டின் பல பாகங்களில் மின்தடை ஏற்பட்டிருந்ததுடன், பல தொழிற்சாலைகள் பாதிப்படைந் திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

## சிங்கப்பூரிலிருந்து சட்டவிரோதமாக தங்கம் கடத்தி வந்தவர் கைது!

கொழும்பு, ஏப்.18

சிங்கப்பூரிலிருந்து சட்டவிரோதமாக எடுத்துவரப்பட்ட 10 கிலோகிராம் தங்கத்தை நேற்று அதிகாலை கட்டுநாயக்க சுங்கப் பிரிவு கைப்பற்றியுள்ளது.

அதனை எடுத்து வந்த சந்தேகநபர் கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடப்படுகின்றது.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்க நகைகள் 70 மில்லியன் ரூபா பெறுமதியானவை என்று சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், சந்தேகநபர் தொடர்பில் சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளைமுன்னெடுத்து வருகின்றனர். (எ)

# 20 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு மதுபான வகை மீட்பு!

இத்தாலியிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட 20 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு மதுபான வகைகளைக் கொழும்பு சுங்கப் பிரிவினர் அண்மையில் மீட்டுள்ளனர்.

இத்தாலியில் வாழ்ந்து வரும் இலங்கையர்களால் இந்த மதுபான வகைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இத்தாலியிலிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த கொள்கலன் ஒன்றில் இந்த வெளிநாட்டு மதுபான வகைகள் மிகவும் நுட்பமான முறையில் வைக்கப்பட்டிருந்தன.

அந்தக் கொள்கலனை திடீரெனச் சோதனையிட்ட போது, அதில் சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு மதுபான வகைகள் மறைத்து கொண்டு வரப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

ஏழு இறக்குமதியாளர்கள் பெயர்களில் இந்த கொள்கலன் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன என்று சுங்கப் பிரிவு அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு மதுபான வகைகளை சுங்கப் பிரிவினர் கைப்பற்றியமையுடன், இது தொடர்பான விசாரணைகளை அவர்கள் ஆரம்பித்துள்ளனர். (எ)

# நுவரெலியாவில் 'சீசன்' ஆரம்பம்! சுற்றுலாப் பயணிகள் படையெடுப்பு!!



நுவரெலியாவில் தற்போது நிலவும் வசந்தகாலம் காரணமாக பெருமளவான சுற்றுலாப் பயணிகள் அங்கு படையெடுத்துள்ளனர்.

புத்தாண்டு மற்றும் நீண்ட விடுமுறை காரணமாக உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் அங்கு சென்றுள்ளனர்.

நுவரெலியாவில் இருந்து 22 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஹோட்டன் சமவெளி தேசிய பூங்காவில் பெருமளவு சுற்றுலாப்பயணிகள்குவிந்துள்ளனர்.

இதனால் ஓஹிய மற்றும் பட்டிபொல நுழைவாயிலுக்கு அருகில் நீண்ட வாகன வரிசை ஏற்பட்டுள்ளது.

தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக 'உலகமுடிவை', (வேர்ண்ட் என்ட்) தெளிவாகப் பார்க்கக் கூடியதாக அங்கு சென்றுள்ள சுற்றுலாப் பயணிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சுற்றுலாப் பயணிகளின் பொலிதீன் பயன்பாடு தொடர்பில் ஹோட்டன் சமவெளி தேசிய பூங்காவின் பொறுப்பாளர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

பொலித்தீன் பாவனையால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படும் என்பதனை மக்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஒற்றுமைப்படுவோம்! தவறினால் தமிழர்கதி என்னவாகுமோ?




பிறந்திருக்கும் ஏ விளம்பி வருடத்தை இலங்கைத் தமிழ் மக்கள் கொண்டாடவில்லை. யுத்தத்தை நடத்திக் கொண்டிருந்த அரசுகள் ஆட்சியில் இருந்தபோது தமிழ்மக்களின் வாழ்விடங்களில் நாளாந்தம் மரணம் நிகழ்ந்தது. வேட்டுச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. அகதி முகாம்களில் ஒருவேளை உணவுக்காக நீண்ட வரிசைகளில் தமிழர்கள் கையேந்தி நின்றார்கள்.

நல்ல நேரம்,ராசியான வர்ண உடை, மருத்து நீர் குளியல் எல்லாமும் தமிழ் மக்களுக்கு பல ஆண்டுகளாக பொருந்திப்போகவில்லை. மருத்து நீர் தேய்த்து குளித்து,ராசியான நிறத்தில் உடை அணிந்து, சுப நேரத்தில் ஆலயம் சென்று வழிபட்டால்தான் படைத்தவன் அருள் புரிவான் என்றால், தமிழ் மக்களை இறைவன் மறந்து பல தசாப்தங்களாகிவிட்டன.

பணம் படைத்தவர்களையும்,சந்தர்ப்பவாதிகளான தமிழ் அரசியல்வாதிகளையும்,வெளிநாட்டில் வாழ்கின்ற வசதியானவர்களுக்கு மட்டுமே இறைவன் மறுபடி மறுபடி அருள் வழங்கி காப்பாற்றிக்கொண்டிருக்க வேண்டும்.

அடுத்த வேளை உணவு நிச்சயமில்லாத வாழ்க்கையையும்,சொந்த நிலத்திற்கு திரும்பிச் சென்று வாழ வழியில்லாமல், அகதி முகாம்களிலும், நண்பர், உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்து வாழ்வதையும் தலையெழுத்து என்று கருதி வாழ்கின்ற மக்களை இறைவனும் மறந்திருப்பான்.

### பிரச்சினைகளுக்கு மத்தியில் தமிழர்கள்

இப்போது தமிழர் நிலத்தில் நான்கு பிரதான பிரச்சினைகளுடன் தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். காணாமற்போன தமது உறவினர்கள் தொடர்பாக ஒரு நியாயமான விசாரணை நடத்தப்பட்டு அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை தெரிந்து கொள்ளவும், அதற்கான பரிகாரத்தைக் காணவும் ஏங்கித் தவிப்போர்,யுத்தத்தின் பெயரால் தம்மிடமிருந்து அபகரிக்கப்பட்ட சொந்த நிலத்தை மீண்டும் தம்மிடம் ஒப்படைக்கவேண்டும்என்ற கோரிக்கையும் 60 நாள்களுக்கும் மேலாக தெருவில் குடும்பங்களாக போராடிக்கொண்டிருப்போர்,படித்துப் பட்டம் பெற்றும் வேலைவாய்ப்புக் கிடைக்கவில்லை என்ற ஏமாற்றத்தில் வேலை கேட்டு இளைஞர்,யுவதிகளாக வீதியில் நின்று போராடுவோர்,யுத்தம் முடிந்து ஏழு ஆண்டுகளாகிவிட்ட போதும் அரசியல் கைதிகளாக சிறைகளில் அடைக்கப்பட்டிருப்போரின் துயரங்கள் தொடர்கதையாக இருப்பது என பிரச்சினைகளில் தமிழர்கள் சிக்கிக் கொண்டுள்ளார்கள்.

இந்த நான்குவகைப் போராட்டங்களிலும் நேரடியாக சம்பந்தப்படாவிட்டாலும்,தம்மைச் சுற்றி நடப்பவற்றை எண்ணி மகிழ்ச்சி கொள்ள முடியாத மன நிலையுடனும்,சேர்ந்து போராட பொதுவான பொறிமுறை இல்லாத தமிழ் மக்களின் இயலாமையை எண்ணியும் வாழ்கின்ற மக்களுமாகவே தமிழ் இனம் இருக்கின்றது.

கடந்த நான்கு தசாப்த காலமாக தமிழர்கள் தம்மைச் சுற்றி நடப்பவை எல்லாவற்றையும் தீர்மானிக்கின்றவர்களாக ஆயுதம் ஏந்தியவர்களே இருக்கின்றார்கள் என்று தமிழ் இயக்கங்கள் மீது கண்மூடித்தனமாக நம்பிக்கை வைத்து இருந்துவிட்டார்கள்.

### இப்படியும் ஒரு நம்பிக்கை

ஒருவேளை தமிழ் ஈழம் கிடைத்துவிடும் அதன் பின்னர் சொந்தக் காணிகளை மீட்பதில் பிரச்சினை இருக்கா என்றும்,தொழில்துறைகளை ஆரம்பிப்பதில் தடைகள் இருக்காது என்றும்,அரச இயந்திரங்கள் கூட தமிழர் என்ற முன்னுரிமை அடிப்படையில் நடக்கும் என்றும் பெருத்த நம்பிக்கையோடு இருந்துவிட்டார்கள்.

ஒருவேளை தமிழ் ஈழம் கிடைக்காவிட்டால்,நமது வாழ்க்கை எவ்வாறு இருக்கும். எவ்வாறான பிரச்சினைகளுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியிருக்கும். நில மீட்பு, வேலைவாய்ப்பு,சாதிய ஒழிப்பு, அபிவிருத்தி, அரசியல் தலைமைத்துவம் எல்லாவற்றையும் இயக்கம் பார்க்கும் என்று இருந்துவிட்டால்,இயக்கம் இல்லாத போது இவை எல்லாம் எப்படி நடந்து முடியப்போகின்றது என்பதைப் பற்றி சிந்திக்கவே இல்லை. ஒருவேளை அப்போது இப்படி சிந்தித்தால் அது ஈழத்துக்கு எதிரான சிந்தனை என்ற வகையில் தமிழ்த் தேசியத்துக்கு துரோகமாக பார்க்கப்பட்டு இருக்கும் என்ற அச்சங்களும் இருந்திருக்கும்.

இப்படி தமிழர்கள் துரோகி என்ற பெயருக்குப் பயந்தும்,தமிழ்த் தேசியத்திற்கு எதிரானது என்று அஞ்சியும் பாவம் சிந்திக்கவே மறந்துவிட்டார்கள். ஆயுதம் ஏந்தியவர்களே எல்லாமுமாக இருப்பார்கள் என்று நம்பியிருந்த தமிழ் இனம் இப்போது எல்லாவற்றையும் இழந்தவர்களாக இருக்கின்றார்கள்.


### போராடிய மக்கள் இன்று...?

இலங்கையில் கொஞ்சம், புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் கொஞ்சமாக ஈழத் தமிழர்கள் சிதறி வாழ்கின்றார்கள். 74 வீத பெரும்பான்மை சிங்கள மக்களும் 12 வீதமான தாமும் சமத்துவமாக வாழும் உரிமைகள் வேண்டுமெனப் போராடிய தமிழர்கள், இன்று வாழ்ந்த இடத்தைத் தாருங்கள் என்றும், வேலை தாருங்கள் என்றும், சிறைகளிலிருந்து விடுதலை செய்யுங்கள் என்றும், காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணை செய்யுங்கள் என்றும் கேட்டுக் கொண்டு இருக்கின்றார்கள்.

அரசியல் உரிமையும்,தனி நாடும் கேட்ட தமிழ் மக்களின் வரலாறு இப்படி வலிமை இழந்துவிட்டதா? என்று எண்ணிப்பார்க்கும்போது சகித்துக்கொள்ள முடியவில்லை.தமிழருக்கு பூர்வீகமான வாழ்விடம் இருக்கின்றது. அரசியல் உரிமைக்கான பாரம்பரியம் இலங்கை வரலாற்றில் இருக்கின்றது.

உலகமெங்கும் வாழும் தமிழ் மக்களின் பொருளாதார பலம் என்ற பெரும் பணபலம் இருக்கின்றது. தமிழர்கள் ஒருங்கிணைக்கப்பட்டால், ஒன்று சேர்ந்து முயற்சி செய்தால்; பெரும் பொருளாதார பலத்துடன் தலை நிமிர்ந்து எழுச்சி





கொண்டு இலங்கை மண்ணில் வாழ முடியும்.

### எல்லா வசதிகள் இருந்தும் அநாதரவான நிலையில்!

இத்தனை இருந்தும் இலங்கையில் தமிழர்கள் அரசியல் அநாதரவாக இருப்பதற்கும், பொருளாதாரம் அபிவிருத்தியடையாமல் இருப்பதற்கும், கௌரவமாக வாழ்வை அமைத்துக் கொள்ள முடியாமல் இருப்பதற்கும் என்ன காரணம் என்பதை ஒவ்வொருதமிழனும் சிந்திக்க வேண்டும்.

இலங்கை தமிழருக்கு பல பிழையீனங்கள் இருந்தாலும் பிரதானமானது. தமக்குள் ஒற்றுமையின்மையே. ஒற்றுமைப்படுவதற்கானபொறிமுறையில்லை. இலங்கையில் பன்சாலைகள் சிங்கள மக்களையும், கிறிஸ்தவ தேவாலயங்கள் கிறிஸ்தவ மக்களையும், பள்ளிவாசல்கள் இஸ்லாமியர்களையும் வழி நடத்துகின்றன. பொது தேவைக்காக ஒற்றுமையாக இருப்பதன் அவசி யத்தை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் போதிக்கின்றன.

அந்த மதங்கள் வழிகாட்டுகின்றன. தமிழர்களிடம் அப்படி ஓர் இணக்கப்பாடு இல்லை. அல்லது பொதுவான மையப்பகுதி இல்லை. மனம்போன போக்கிலும், கால் போன போக்கிலுமே தமிழர்களின் பயணம் போகின்றது. யார் தலைமை என்பதையும், அவன் என்ன சாதி என்பதையும், அவன் எந்த பிராந்தியத்தைச் சேர்ந்தவன் என்பதையும்,அவன் கூறுகின்ற கருத்துக் குறித்த ஆயிரம் வியாக் கியானத்தையும் கொண்டுமே ஆராய்கின்ற நிலைமை இன்றுள்ளது. உலகமே ஒன்றோடு ஒன்று சேர்ந்து வாழ்தலை புரிந்து கொண்ட போதும், தமிழன் தனித்தே வாழ்ந்து சாகும் அறிவு மிகுந்தவன்.

> *தமிழ்மக்கள் தமது பலம் எது, பலவீனம் எது என்பதை சிந்திக்க வேண்டிய இந்தத் தருணத்தையும் தவற விடுவார்களாக இருந்தால், கொலைகள் நடக்காமலும், இரத்தம் சிந்தப்படாமலும் தமிழ் இனத்தின் வலிமை இல்லாது செய்யப்படலாம்.*

### மீண்டும் சாதியம்

யுத்தத்திற்குப் பிறகு மீண்டும் தலை தூக்கியிருக்கும் சாதியமானது இப்போது 50 ஆண்டுகள் தமிழரின் சிந்தனைகளை பின்னோக்கி இழுத்துவிட்டுள்ளது. எந்தளவுக்கு என்றால், கோயில்களை சாதிகளின் அடிப்படையில் பிரித்துக் கொண்டு வழிபடும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது. இது மட்டுமல்லாமல் காணிகளை விற்பனை செய்வதற்கும் ‘எந்தச் சாதி’ என்று கேட்டு விற்பனை செய்யும் கேவலமான மனோ நிலை தோற்றம் பெற்றுவருகின்றது.

இப்போது வடக்கு கிழக்கு மாகாண மக்களும் தாம் இரண்டு மாகாண மக்களாக இருப்பதையே விரும்புகின்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்கள் தாம் நடைமுறைச்சாத்தியமாக தமிழர் பிரச்சினையை அணுக முற்படுகின்றபோதும், வடக்கு மாகாண தமிழர்கள்,தீவிரமான போக்குடனும், மீண்டுமொரு ஆயுதவன்முறைக்கும் தாம் தயாராக இருப்பதுபோலவும், சர்வதேசத்தை அழைத்து வந்து சிங்களவனின் காதைத்திருகி முதலில் தன்னாட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற அசாத்தியமான அணுகுமுறை மயக்கத்திற்குள் இருப்பதாகவும் விவாதங்கள் நடந்து கொண்டு இருக்கின்றன.

வடக்குத் தலைமைகளின் நடைமுறைச்சாத்தியமற்ற தீவிர நிலைப்பாடுகளுக்கு அதிகமாக பலியிடப்பட்டவர்கள் கிழக்கு மாகாண தமிழர்களே என்பதை கிழக்கில் வெளிப்படையாகவே விமர்சிக்கின்ற நிலைமை இன்று தோற்றம் பெற்று வருகின்றது.

### சிந்தித்துச் செயற்படுவோம்

இவ்வாறான நிலையற்ற சூழலில் இலங்கையில் தமிழர்கள் தமக்கிடையேயான அனைத்து பிரிவினைகளையும், வேறுபாடுகளையும் தூரத்தில் போட்டுவிட்டு, ‘நாம் தமிழர்’ என்றும்,‘நாம் ஒற்றுமைப்படுவது காலத்தின் அவசியம்’ என்றும் சிந்திக்க வேண்டும். நாம் ஒற்றுமைப்படாவிட்டால் நம்மைப் பிரித்து ஆளும் தந்திரோபாயத்துடன் காய் நகர்த்திக்கொண்டு இருக்கும் சிங்கள அரசுகளுக்கு தமது வேலை மிக இலகுவாகிவிடும்.

தமிழ்மக்கள் தமது பலம் எது, பலவீனம் எது என்பதை சிந்திக்க வேண்டிய இந்தத் தருணத்தையும் தவறவிடுவார்களாக இருந்தால், கொலைகள் நடக்காமலும், இரத்தம் சிந்தப்படாமலும் தமிழ் இனத்தின் வலிமை இல்லாது செய்யப்படலாம். இனமானத்துடன் தமிழன் வாழ வேண்டும் என்ற அடிப்படைச் சிந்தனையின் கூர் முனை எதிரிகளால் முறிக்கப்படலாம். ★

காலைக்கதிர் Kalaikkathir






பொன்.வேணு கிருஷ்ணா

போர்டோரிகோ தேசியக் கட்சியின் போராட்டங்கள் அமெரிக்க இராணுவத்தால் அடக்கி ஒடுக்கப்பட்டு, அதன் தலைவர் அல்பிசுகேம்பஸ் கைதாகி சிறைக்குச் சென்ற சமயத்தில் உருவானது தான் பாப்புலர் கட்சி. இக்கட்சி அதற்கு முன்னிருந்த மற்ற விடுதலை இயக்கங்கள் போல் அல்லாமல் 'அமெரிக்க வல்லரசுடன் இணைந்து போர்டோரிகோவை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்ல முடியும்' என்ற புதிய கோரிக்கையை மக்கள் முன்வைத்தது. அதற்குக் கைம்மாறாக அமெரிக்க பெரு நிறுவனங்கள் போர்டோரிகோவிற்குச் சிறியளவில் வரி செலுத்த வேண்டும் என ஒப்பந்தம் போட்டது. இதனால் போர்டோரிகோவிற்கு வருமானம் வரும் என்கிற மாயையை உருவாக்கியதால், பாப்புலர் ஜனநாயகக் கட்சி மக்களிடையே பிரபலமடைந்தது. அத்தோடு மட்டுமல்லாமல், கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை முழக்கங்கள் சிலவற்றையும் பயன்படுத்த ஆரம்பித்தது பாப்புலர் ஜனநாயகக் கட்சி.

அது தான் மெக்கர்த்தியிசம் அமெரிக்காவில் பரவியிருந்த காலம். அது போர்டோரிகோவையும் விட்டுவைக்கவில்லை. 1959 இல் உருவான கியூப புரட்சியின்தாக்கம் போர்டோரிகோவிலும் எதிரொலித்தது. பாப்புலர் ஜனநாயகக் கட்சி ஏற்கனவே போர்டோரிகோவின் விடுதலைக் கோரிக்கையைக் கைவிட்ட காரணத்தால் அதிலிருந்து தனியாகப் பிரிந்த போர்டோரிகோவின் விடுதலைக் கட்சியும், போர்டோரிகோ தேசியக் கட்சியும் அமெரிக்காவிற்கு எதிராகத் தனித்தனியே விடுதலைப் போராட்டங்களை நடத்தின. குறிப்பாக 1960 களில் விடுதலைப் போராட்டம், இடதுசாரி எண்ணங்கொண்ட இயக்கங்களால் நடத்தப்பட்டன. தொடர்ச்சியான தேர்தல் தோல்விகளாலும், அமெரிக்க இராணுவத்தின் அடக்குமுறைகளைத் தாக்குப் பிடிக்க முடியாமல் போனமையாலும் போர்டோரிகோவின் விடுதலைக்கட்சி சுவடில்லாமல் போனது. 1971 இல் உருவான போர்டோரிகோ சோசலிசக் கட்சிக்கும் பின்னாளில் இதேநிலைதான். இவ்வாறாகக் கடந்த 115 ஆண்டுகளாக புதிய கட்சிகள் உருவாவதும் மக்களின் அபிமானத்தை ஓரளவிற்குப் பெறுவதும், பின்னர் அடக்குமுறைகளால் அவைகள் காணாமல் போகின்றமையும் நடந்து கொண்டே தான் இருக்கின்றன. இதற்குப் பின்னால் அமெரிக்க வல்லரசும், இராணுவமும், அமெரிக்கப் பெரு நிறுவனங்களுமே காரணமாக இருந்து வந்திருக்கின்றன என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

**விடுதலைப் போராளிகளை அமெரிக்கா அழித்த விதம்:**

70 களில் போர்ட்டோரிகோவில் FALN என்றொரு மார்க்சிய-லெனினிய இயக்கம் உருவானது. போர்ட்டோரிக்கோவில் அமெரிக்க ஆதிக்கத்தை எதிர்த்து போராடுவதை ஒருபுறமும், அமெரிக்காவிற்கே சென்று பொதுமக்கள் அதிகம் கூடாத அரசு அலுவலகங்களையும் இராணுவத்துறை கட்டடங்களையும் தாக்குவதை மறுபுறமும் செய்ய ஆரம்பித்தது அவ்வமைப்பு. அமெரிக்க உழைக்கும் வர்க்கம் தங்களுடைய எதிரிகள் இல்லை என்றும், அவர்களுக்குத் தங்களது பிரச்சினைகளை எடுத்துரைப்பதற்கான கவனவீர்ப்பாகவே இத்தாக்குதல்களை நடத்துவதாக அறிவித்தார்கள். ஆயுதந்தாங்கிய போராட்டங்கள் நடத்திக்கொண்டிருந்தபோதே, தொழிலாளர் மற்றும் போராட்டங்களை ஆதரிப்பது, இன்னபிற விடுதலை இயக்கங்களோடு இணைந்து செயற்படுவது, எனத் தொடர்ந்து மக்களோடும் தொடர்பில் இருந்தமையால், FALN இயக்கம் வளர்ந்துகொண்டே இருந்தது. அதனால், FALN இயக்கத்தினரை மிகவும் ஆபத்தானவர்களாக அறிவித்து, தேடுதல் வேட்டையை நடத்தியது அமெரிக்க எப்.பி.ஐ. அமெரிக்காவில் வாழ்ந்த போர்டோரிகோ மக்களின் உடைமைகளுக்கும் சொத்துக்களுக்கும், இயன்றளவு சேதங்களை விளைவித்தது எப்.பி.ஐ. 80களின் ஆரம்பத்தில் FALN முக்கியமான போராளிகள் பலரையும் கைது செய்தது அமெரிக்கா. அவர்கள் நிகழ்த்திய குண்டுவெடிப்பு சம்பவங்களுக்கு ஆதாரங்கள் இல்லாதமையாலும், அக்குண்டுவெடிப்பு சம்பவங்களால் யாருமே உயிரிழக்காத காரணத்தாலும், அவர்கள் யாருக்கும் மிகப்பெரிய தண்டனைகள் வழங்கமுடியாது என்பதை உணர்ந்திருந்தது அமெரிக்க அரசு. அதனால், அவர்கள் நாட்டின் இறையாண்மையைக் கெடுத்து, அமெரிக்க அரசைக் கவிழ்க்கக் கூடும் என்கிற யூகத்தையே குற்றமாக முன்வைத்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் 100 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதித்தது அமெரிக்க நீதிமன்றம். FALN இயக்கத்தின் தலைவரான பிளிபர்டோ தலைமறைவு வாழ்க்கை வாழ ஆரம்பித்தார். 2005 ஆம் ஆண்டு அவர் தங்கியிருந்த வீட்டைச்சுற்றி வளைத்து, கொடூரமான முறையில் அவரைக்கொன்றது அமெரிக்க எப்.பி.ஐ. இது ஒரு சட்டவிரோத, முறையற்ற கொலை என்றே இதனை விசாரித்த போர்டோரிகோவின் பொதுநலவாய ஆணையம் அறிவித்தது. ஆனால், எப்.பி.ஐ.யின் இயக்குநரோ, எப்.பி.ஐ.யின் சட்டப்படி நாங்கள் செய்தது சரிதான் என்று அறிவித்தார்.

சிறைக்குள் தள்ளப்படும் போராளிகள் : refhttp://boricua humanrights.org/ref

| போர்டோரிகோ போராளிகள் | வழங்கப்பட்ட தண்டனை ஆண்டுகள் | சிறையில் இருந்த ஆண்டுகள் |
|---|---|---|
| ஆஸ்கர் லோபஸ் ரிவேரா [ref]http://en.wikipedia.org/wiki/Oscar_L%C3%B3pez_Rivera[/ref] | 55 | 32 |
| கார்லோஸ் அல்பர்டோ [ref]http://en.wikipedia.org/wiki/Carlos_Alberto_Torres_%28Puerto_Rican_Nationalist%29[/ref] | 78 | 30 |
| ரபேல் கேன்சல் மிரண்டா [ref]en.wikipedia.org/wiki/Rafael_Cancel_Miranda[/ref] | 85 | 29 |
| ஆஸ்கர் கொலாசோ | 30 | 29 |
| கிரிசெலியோ டொரசொலா | 30 | 27 |
| அல்பிசு கேம்பஸ் [ref]http://en.wikipedia.org/wiki/Pedro_Albizu_Campus[/ref] | | 26 |
| லொலிடா லேப்ரோன் | 50 | 25 |
| எட்வின் கோர்டஸ் | 35 | 19 |
| எலிசம் எஸ்கோபார் | 68 | 19 |
| ரிகார்டோ ஜிமெனெஸ் | 90 | 19 |
| அடோல்போ மடோஸ் | 70 | 19 |
| டில்சியா நோமி பகன் | 55 | 19 |
| அலிசியா | 55 | 19 |
| இடா லுஸ் | 75 | 19 |
| லூயிஸ் ரோசா | 75 | 19 |
| கார்மென் வேலண்டின் | 90 | 19 |
| யுவான் என்ரிக் | 55 | 19 |
| பிளான்கா | 90 | 17 |
| அல்பர்டோ ரோட்ரிக்ஸ் | 35 | 16 |
| டோரஸ் | 35 | 16 |
| ஒல்கா விஸ்கல் | 8 | 7 |
| ஃபிரான்சிஸ்கோ | 10 | 3 |
| கார்லோஸ் வேலஸ் | 10 | 3 |
| விடல் சான்டியாகோ | 17 | 2 |
| யுவான் அந்தோனியோ | 10 | 1 |

மேலும் போர்டோரிகோவில் விடுதலை வேண்டிப் போராடுகிற ஒவ்வொரு போராளியும் அமெரிக்க சிறைகளுக்குள் தள்ளப்பட்டு, எஞ்சிய வாழ்நாளை சிறைக்கம்பிகளுக்குள் கழிக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். உதாரணத்திற்கு போர்டோரிகோ விடுதலைப் போராளி ஆஸ்கர் லோபஸ் 32 ஆண்டுகளாகச் சிறையில் இருந்து வருகிறார். உலகிலேயே அதிக ஆண்டுகள் சிறையில் வசிக்கும் அரசியல் கைதி இவர்தான். refhttps://www.goodreads.com/book/show 13592672-bet w e en-to rture- and-resistance/ref 1980களில் போர்டோரிகோவில் ஆட்சி செய்கிற அமெரிக்க அரசை வீழ்த்திவிடக் கூடும் என்று ஆஸ்கர் லோபஸ் உள்ளிட்ட 12 பேரைக் கைது செய்துசிறையில் அடைத்தது அமெரிக்க அரசு. ஆஸ்கர் லோபஸ் தவிர மற்ற அனைவரும் 1999 இல் கிளிண்டன் ஆட்சிக் காலத்தில் (செய்யாத குற்றங்களுக்கு) பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். ஆனால், ஆஸ்கர் லோபஸ் இன்றும் அமெரிக்கச் சிறையில் தான் இருக்கிறார். 40 ஆண்டுகள், 50 ஆண்டுகள் எனச் சர்வசாதாரணமாகத் தண்டனை விதிக்கப்பட்டுத் தங்கள் வாழ்நாளையே இன்றளவும் சிறைக் கம்பிகளுக்குள் கழிக்கின்றனர் ஏராளமான விடுதலைப் போராளிகள். இதில் ஏராளமான பெண் போராளிகளும் அடக்கம்.

மத்திய கிழக்காசிய நாடுகளில் விடுதலை பெற்று தரப்போகிறோம் என்று சொல்லி அங்கெல்லாம் அமெரிக்கா செய்த அட்டூழியங்களை உலகறியும். அதே வேளையில், 100 ஆண்டுகளுக்கும் மேலாக போர்டோரிகோ என்கிற நாட்டை காலனியாகப் பிடித்து வைத்திருக்கிற உண்மையை உலகிற்குச் சொல்லாமல் விட்டது தற்செயலான ஒன்றல்ல. விடுதலையும் வழங்காமல், அப்பகுதியினை அமெரிக்காவின் ஒரு மாநிலமாகவும் அறிவிக்காமல், தொடர்ந்து ஆக்கிரமித்து வைத்திருக்கிறது அமெரிக்கா. இதற்கு ஐ.நா. சபை உள்ளிட்ட எவரும் எதிர்ப்பாக இருக்கவில்லை. இந்த 100 ஆண்டுகளில், போர்டோரிக்கோவில் எண்ணற்ற கொலைகள், சிறைவைப்புகள், சுரண்டல்களை நேரடியாகவே நிகழ்த்தி வந்திருக்கிறது அமெரிக்கா. இதற்காக அவர்கள் எந்த சர்வதேச அமைப்புகளிடமும் பதில் சொல்லியதில்லை.

1. போர்டோரிக்கோவின் ஆட்சியை அம்மக்களிடமே ஒப்படைக்கவேண்டும்.

2. அந்நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் தலையிடக்கூடாது.

3. அமெரிக்க மற்றும் போர்டோரிகோ சிறைகளில் அடைத்துவைக்கப்பட்டிருக்கும் விடுதலைப் போராளிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

4. 100 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்கா நடத்திவந்த காலனிய ஆட்சியால் அவர்கள் இழந்தவற்றை ஈடுசெய்ய, பெருந்தொகையை நட்ட ஈடாக அளிக்கவேண்டும்.

5. போர்டோரிக்கோ மக்களிடம் நிபந்தனையற்ற மன்னிப்பை அமெரிக்க அரசு கோர வேண்டும்.

உலக குடிமக்களாகிய நம் அனைவரின் கோரிக்கைகளான இவற்றை நிறைவேற்றிவிட்டு, அதன் பின்னர் மற்ற நாடுகளின் ஜனநாயகம் குறித்தும் மனிதநேயம் குறித்தும் வாய்திறக்கட்டும் அமெரிக்கா.

இக் கட்டுரைத்தொடர் எழுத உதவியவை:


1. Book: Between Torture and Resistance by Oscar Lopez Rivera

2. Book: Puerto Rico, independence is a necessity by Rafael Cancel Miranda

3. Book: Free Puerto Rico by Pedro Albizu Campos


(கேள்வி தொடரும்...)




# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




119

## யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சமாதானப் பேச்சுகள்

### யாழ்ப்பாணப் பேச்சுகள் தோல்வியடைந்தமை ஏன்?

சிறிலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் மத்தியில் சமாதானப் பேச்சுகள் நடைபெறுகின்றமையைச் சிங்களப் படைத்துறை ஆரம்பத்திலிருந்தே விரும்பவில்லை. விடுதலைப் புலிகள் முன்வைத்த நியாயமான, மனிதாபிமானக் கோரிக்கைகள் குறித்து அரச படைத்தரப்பு மிகவும் இறுக்கமான, விட்டுக் கொடாத கடும்போக்கைக் கடைப்பிடித்தது. பொருளாதாரத் தடைகளைத் தளர்த்துவதற்குச் சிங்கள இராணுவம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது. மக்களின் நாளாந்த வாழ்வுக்கு அவசியமான பொருள்கள் அனைத்தையும் இராணுவப் பாவனைப் பொருள்களாகச் சித்திரித்துக் காட்டியது. சில அத்தியாவசியப் பொருள்கள் மீதான தடைகள் நீக்கப்பட்டுள்ளன எனக் காலத்துக்குக் காலம் அரசு வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்புகள் அர்த்தமற்ற கேலிக் கூத்தாகவே மாறின. வடக்கின் எல்லைப் பிரதேசங்கள் இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் இருந்தமையால், வவுனியா எல்லைகள் ஊடாகப் பொருள்கள் கொண்டு செல்ல முடியாதவாறு இராணுவம் தடைபோட்டது.

அரச படைகளின் இந்த அநீதியான நடவடிக்கை பற்றி, எத்தனையோ தடவைகள் எழுத்திலும் நேரடிப் பேச்சுகளிலும் முறையிட்ட போதும் உருப்படியான நடவடிக்கைகள் எதுவுமே எடுபடவில்லை. இந்தப் பிரச்சினை பற்றி ஜனாதிபதி சந்திரிகா நன்கறிந்த போதும், இது பற்றி அவர் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. சந்திரிகாவைப் பொறுத்தவரை, அவர் ஆயுதப் படைகளின் கேந்திர நலனுக்கும் தேசியப் பாதுகாப்புக்குமே அதிமுக்கியத்துவம் கொடுத்தார். இதனால், இராணுவத்தினரின் அட்டூழியங்களிலும், தன்னிச்சையான நடவடிக்கைகளிலும் அவர் குறுக்கிட விரும்பவில்லை.

ஆனால், எமது மக்களைப் பொறுத்தமட்டில், பொருளாதாரத் தடை அவர்களது இருப்பு நிலைக்கே அச்சுறுத்தலை ஏற்படுத்தும் பூதாகரப் பிரச்சினையாக விஸ்வரூபம் எடுத்தது. எமது மக்களை ஜீவமரணப் போராட்டத்தில் தள்ளிவிட்ட இந்த அநீதியைப் போக்கிவிட ஆறு மாத காலமாக எம்மால் இயன்றளவு முயற்சித்தும் முடியவில்லை. தமிழ் மக்களின் அவல நிலையை விட இராணுவத்தின் நலனுக்கே முன்னுரிமை கொடுத்து, இந்தப் பொருளாதார ஒடுக்குமுறையை நீக்கிவிட சந்திரிகா அரசு மறுத்து வந்தமையும் பேச்சுகளின் தோல்விக்கான அடுத்த முக்கிய காரணமாகும்.

சர்வதேசக் கண்காணிப்புக் குழுவின் மேற்பார்வையுடன் ஒரு நிலையான, நிரந்தரமான போர் நிறுத்த உடன்பாட்டைச் செய்துகொள்ள சிறிலங்காவின் இராணுவத் தலைமைப்பீடம் விரும்பவில்லை. உதவிப் பாதுகாப்பு அமைச்சரான கேணல் ரத்வத்தை தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதம் ஒன்றில், அரசு ஒரு நிரந்தரமான போர் நிறுத்தத்தை விரும்பவில்லை என்றும், அதிகாரபூர்வமற்ற, இறுக்கமற்ற, தற்காலிகமான பகை நிறுத்தத்தையே விரும்புவதாகவும் சுட்டிக் காட்டினார். இதிலிருந்து ஓர் உண்மை புலனாகியது. விடுதலைப் புலிகளுடன், சமாதானப் பேச்சுகளை நடத்தியபோதும், இராணுவ அணுகுமுறையையும் இராணுவத் தீர்வையும் அரசு கைவிடவில்லை என்பது தெளிவாகியது. இரு தரப்பினரும் கைச்சாத்திட்ட இந்தத் தற்காலிக பகை நிறுத்த உடன்பாட்டையும் செம்மையாகச் செயற்படுத்த முடியாதவாறு அரச படைகள் ஒப்பந்த விதிகளைத் தொடர்ச்சியாக மீறி வந்தன. கிழக்கு மாகாணத்தில் அரச படைகளின் அடாவடித்தனத்தால் எமது போராளிகள் சுதந்திரமாக நடமாட முடியாது முகாம்களுக்குள் முடங்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

பூநகரிப் படை முகாமை அகற்றி, யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் வன்னி மாநிலத்துக்கும் ஒரு தரைப் பாதையைத் திறந்து விடுமாறு விடுதலைப் புலிகள் முன்வைத்த கோரிக்கையை இராணுவத் தலைமைப்பீடம் கடுமையாக எதிர்த்தது. புவியியல் ரீதியாகப் பார்த்தால் யாழ்ப்பாணக் குடாநாட்டின் கழுத்தை நெரித்து நிற்கும் சங்கிலிக் கோர்வையாகவே பூநகரிப் படை முகாமும் ஆனையிறவு இராணுவப் பெரும் தளமும் அமையப் பெற்றிருக்கின்றமையைக் காணலாம். சன நெரிசல் நிறைந்த குடாநாட்டைத் தனிமைப்படுத்தி, வன்னிப் பெருநிலப் பரப்பிலிருந்து துண்டித்து வைக்கும் நோக்குடனேயே இந்தப் படைத் தளங்கள் அமைக்கப் பட்டன. கடற்படையின் சண்டைப் படகுகள் இரவு பகலாக நடமாடும் கிளாலி நீரேரியைப் பொது மக்கள் கடந்து செல்வது மிகவும் ஆபத்தானதாக இருந்தது. இந்த நீரேரியில் கடற்படையினரது வெறியாட்டத்துக்கு ஏராளமான அப்பாவிப் பொதுமக்கள் பலியாகி உள்ளனர். எனவேதான், யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்குச் சென்றுவர ஒரு பாதுகாப்பான போக்குவரத்துப் பாதையை எமது மக்கள் கோரி நின்றனர். மக்களின் அத்தியாவசியத் தேவையின் அடிப்படையில்தான் பூநகரிப் படை முகாமை அகற்றிவிட்டு சங்குப்பிட்டி – பூநகரிப் பாதையைத் திறக்குமாறு விடுதலைப் புலிகள் அரசைக் கோரினர். எமது மக்களின் முக்கியமான இந்தப் போக்குவரத்துப் பிரச்சினையைத் தீர்த்து, அமைதியையும் இயல்பு நிலையையும் தோற்றுவிப்பதற்குச் சந்திரிகா அரசு உண்மையான உறுதிப்பாடு கொண்டிருந்தால், பூநகரிப் படை முகாமை பிறிதோர் இடத்துக்கு மாற்றியிருக்கலாம். ஆனால், விடுதலைப் புலிகளின் யோசனைக்கு இராணுவம் கடும் எதிர்ப்புத் தெரிவித்தமையால், அரசு இந்தப் பிரச்சினையில் கடும்போக்கைக் கடைப்பிடித்தது. ஆயினும் பின்னர், 1996 ஆம் ஆண்டில் முல்லைத்தீவுப் பெரும் தளம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து, பூநகரி முகாம் பாதுகாப்பற்ற நிலையில் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கூறி, அந்த முகாமைச் சந்திரிகா அரசு மூடியது. சிறிலங்காப் படைத்துறையினரது விட்டுக் கொடுக்காத கடும்போக்கும் விடுதலைப் புலிகள் இயக்கம் மீது அவர்கள் கொண்டிருந்த பகையுணர்வுமே யாழ்ப்பாணப் பேச்சுகள் முறிவடைந்தமைக்கு இன்னொரு காரணமாகும்.

யாழ்ப்பாணப் பேச்சு தோல்வியடைந்ததை அடுத்து கட்டவிழ்ந்த சம்பவங்கள் அரசின் அந்தரங்க இராணுவத் திட்டம் பற்றி நாம் கொண்டிருந்த சந்தேகத்தை உறுதிப்படுத்துவனவாக அமைந்தன.

> அமைதியை நிலைநாட்ட போர் அவசியம் என்ற தனது விசித்திரமான கொள்கைக்குச் சர்வதேச சமூகத்திடமிருந்து நிதி உதவியும் அரசியல் ஆதரவும் பெற்றுக் கொண்ட சந்திரிகா குமாரதுங்கா அரசு, பிரமாண்டமான அளவில் போர் ஆயத்தங்களைச் செய்தது. முப்படைத் தளபதிகளின் விருப்புக்கு ஏற்ப, பெரும் தொகையில் பணத்தைக் கொட்டி, உலகெங்கும் இருந்து நவீன ஆயுதங்கள் பெறப்பட்டன

பேச்சுகள் முறிவடைந்த குறுகிய காலத்தினுள், இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப் பரவலாக்கத் திட்டம் ஒன்றை அரசு வெளியிட்டது. நிதி, சட்டம் ஒழுங்கு, நில உரிமை, கல்வி போன்ற விடயங்களில் கணிசமான அதிகாரங்களை வழங்கும் பிரதேச சுயாட்சித் திட்டமாக இந்தப் புதிய யோசனைகள் அமையப் பெற்றன. சந்திரிகா ஆட்சிப்பீடத்தின் இந்த அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை முற்போக்கானது என்றும் புரட்சிகரமானது என்றும் 'தமிழர்கள் கனவில் காண முடியாத அளவுக்கு' ஆட்சியதிகாரம் அதில் உள்ளதென்றும், அரச கட்டுப்பாட்டு ஊடகங்கள் அதனைப் புகழ்ந்துரைத்தன. சமாதானப் பேச்சுகள் நடைபெற்ற வேளையில் வெளியிடாத இந்தத் தீர்வுத் திட்டத்தை, போர் வெடித்த பின்பு அரசு அறிவிப்பதன் அந்தரங்க நோக்கம் என்னவென்பதைத் தமிழ் மக்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அதே சமயம், சர்வதேச சமூகம் சந்திரிகா அரசின் அதிகாரப் பகிர்வுத் திட்டத்துக்கு அமோக ஆதரவை வழங்கியது. ஆசியாவின் மிகச் சிக்கலான இனப் பிரச்சினைக்கு ஒரு புரட்சிகரமான தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டிருப்பதாக சர்வதேச சமூகம் அரசின் யோசனையைப் பாராட்டியது.

தான் முன்வைத்திருக்கும் புதுமையான தீர்வுத் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி, ஒரு நிரந்தர சமாதானச் சூழ்நிலையை நிலைநாட்டுவதாயின் 'சமாதானத்தின் விரோதிகளை' நசுக்கி விட வேண்டும் என்றும் அதற்கு யுத்தம் தவிர்க்க முடியாதது என்றும் சந்திரிகா அரசு ஒரு விபரீதமான சிந்தனையை முன்வைத்தது. சமாதானத்தின் எதிரிகள் என விடுதலைப் புலிகள் மீது அரசு ஏற்கனவே பழி சுமத்தியிருந்தது. அமைதி வழியில் அரசியல் தீர்வு காண்பதற்கு எதிரானவர்கள் என்பதைச் சமாதானப் பேச்சுகளை முறித்துக் கொண்டதன் மூலம் விடுதலைப் புலிகள் நிரூபித்து விட்டார்கள் என்பது அரசின் வாதம். ஆகவே, விடுதலைப் புலிகள் இயக்கமே சமாதான வழிமுறைக்கும் அரசியல் தீர்வுக்கும் பெரும் முட்டுக்கட்டையாக இருக்கின்றது என்பதும் அவர்களது கருத்து. ஆகவே, நிலையான சமாதானத்தை நிறுவி, தமிழரின் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண்பதாக இருந்தால் ஒரு பெரும் யுத்தம் மூலம் விடுதலைப் புலிகள் அமைப்பு பூண்டோடு அழிக்கப்பட வேண்டும் எனச் சந்திரிகா அரசு பரப்புரை நிகழ்த்தியது. இப்படியாக சமாதானம் என்ற உன்னத இலட்சியத்தை அடைவதற்காக போர் என்ற அழிவு நடவடிக்கை அவசியமாகிறது என்ற விபரீதமான கோட்பாடு முன்வைக்கப்பட்டது. 'சமாதானத்துக்கான போர்' என்ற சந்திரிகாவின் இந்தக் கருத்தியல் வித்தையை உலக நாடுகளும் விசாரணையின்றி விழுங்கிக் கொண்டன.

பிரதேச சுயாட்சி அதிகாரங்களைக் கொண்ட தனது 'முற்போக்கான' திட்டம் மூலம் தமிழ் மக்களைத் தன் பக்கம் கவர்ந்து இழுத்து விடலாம் என்றும், இதன் மூலம் விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்படுத்தி விடலாம் என்றும் அரசு தப்புக் கணக்குப் போட்டது. சிங்கள மேலாதிக்க வாதத்தின் நயவஞ்சக அரசியல் பற்றிக் கசப்பான வரலாற்று அனுபவங்களைப் பெற்றிருந்த எமது மக்கள் சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தில் நம்பிக்கை வைக்கவில்லை. சந்திரிகா உறுதியளித்த நிரந்தரமான அமைதியிலும் அவர்களுக்கு நம்பிக்கை இருக்கவில்லை. ஓர் உண்மை மட்டும் எமது மக்களுக்கு நிச்சயமாகப் புலப்பட்டது. அதாவது, பேரழிவுகளை உண்டுபண்ணும் கொடிய யுத்தம் ஒன்று தம்மீது திணிக்கப்படவிருக்கிறது என்ற யதார்த்தத்தை அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

அமைதியை நிலைநாட்டப் போர் அவசியம் என்ற தனது விசித்திரமான கொள்கைக்குச் சர்வதேசச் சமூகத்திடமிருந்து நிதி உதவியும் அரசியல் ஆதரவும் பெற்றுக்கொண்ட சந்திரிகா குமாரதுங்கா அரசு, பிரமாண்டமான அளவில் போர் ஆயத்தங்களைச் செய்தது. முப்படைத் தளபதிகளின் விருப்புக்கு ஏற்ப, பெரும் தொகையில் பணத்தைக் கொட்டி, உலகெங்குமிருந்து நவீன ஆயுதங்கள் பெறப்பட்டன. பலாலி இராணுவப் பெரும் தளத்தில் பெருமளவில் படைகள் குவிக்கப்பட்டன. இலங்கைத்தீவு அடங்கிலுமிருந்து ஐம்பதாயிரம் துருப்புகள் அணிதிரட்டப்பட்டன. யாழ்ப்பாணம் மீதான பெரும் படையெடுப்பு, பெரும் வன்முறைப் புயலாக, கோரமான அழிவுகளுடன் கட்டவிழ்ந்தது. யாழ்ப்பாணப் பேச்சுகளின் போது விடுதலைப் புலிகளின் தலைமை சரியாகச் சந்தேகித்த அரசின் அந்தரங்க இராணுவத் திட்டம், நிதர்சன வடிவம் எடுத்து, போர் அரக்கனாக எமது மக்களைத் தீண்டியது. ஓர் ஆக்கிரமிப்புப் போருக்கான முன்னேற்பாடுகளைச் செய்யும் அரசியல் நாடகமாகவே சந்திரிகா அரசு யாழ்ப்பாணப் பேச்சுகளை அரங்கேற்றியது என்பது இன்று உலகறிந்த உண்மையாகியது.

(தொடரும்...)







# பிரான்ஸ் செவரோன் மாநிலத்தில் நடந்த பரத நாட்டிய விழா


பிரான்ஸ் மண்ணில் வாழ்ந்து வரும் பரத நாட்டிய மாணவர்களினது திறனை ஊக்குவிக்கவும், ஆசிரியர்களது திறனை வெளிகாட்டும் முகமாகவும் பிரான்ஸ் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பினர் 4 ஆவது தடவையாக நடத்தும் பரதநாட்டியத்திற்கான 'தாம் தீம் தகதிமிதா' நடன நிகழ்வு கடந்த 9 ஆம் திகதி பிரான்ஸின் புறநகர் பகுதியில் ஒன்றான செவரோன் மாநகரத்தில் நடைபெற்றது.


ஆரம்ப நிகழ்வாக தமிழீழ தாய் மண்ணின் விடுதலைக்காகத் தம்முயிரை ஈகம் செய்தவர்களுக்கான ஈகச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நடன ஆசிரியை திருமதி. றொனி செல்வராஜ் (திரான்சி தமிழ்ச்சோலை) மாணவர்களின் புஷ்பாஞ்சலியுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

# சுவிஸில் நடைபெற்ற தமிழ் மாணவருக்கான பரீட்சைகள்





சுவிஸ் தமிழர் நட்புறவுச்சங்கம் சூரிச் தமிழ் மாணவர்களை மையப்படுத்தி அவர்களின் திறன்களை வளப்படுத்தும் நோக்கில் நடத்திய 2017 ஆம் ஆண்டுக்கான பரீட்சைகள் கடந்த 9 ஆம் திகதி சூரிச் சிலிறன் என்ற இடத்தில் நடைபெற்றன.

ஆண்டு தோறும் நடத்தப்படும் இந்தப்பரீட்சையில் தமிழ், கணிதம், டொச் மொழி, ஆங்கிலம், பிரெஞ் ஆகிய பாடங்களுக்குத் தமிழ் மாணவர்கள் தோற்றினர்.

குறிப்பிட்ட பரீட்சைகளில் 640 மாணவர்கள் பங்குபற்றினர் என்று அமைப்பின் தலைவர் க. சற்குணமோகன் தெரிவித்தார். சுவிஸ் தமிழர் நட்புறவுச்சங்கம் சூரிச் அமைப்பினர் சூச் மாநிலத்தில் தமிழர்களின் நலன் கருதி பல்வேறு செயற்றிட்டங்களை செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# நெதர்லாந்தில் கேணல் கிட்டு ஞாபகார்த்த உதைபந்தாட்டம்









நெதர்லாந்தில் கேணல் கிட்டண்ணா ஞாபகார்த்த உள்ளரங்க உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த 8 ஆம் திகதி டென் சூட்டமீர் என்னுமிடத்தில் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகிய இந்தநிகழ்வு ஆரம்ப நிகழ்வுகளான பொதுச்சுடரேற்றல், ஈகச் சுடரேற்றல், மலர்வணக்கம், அகவணக்கம் என்பனவற்றைத் தொடர்ந்து போட்டிகள் ஆரம்பமாகி விறுவிறுப்பாக நடைபெற்றன.


**வளர்ந்தோருக்கான உதை பந்தாட்டத்தில்-**

3 ஆம் இடம் அவுடன்போஸ் விளையாட்டுக்கழகமும் 2 ஆம் இடத்தை டென் கெல்வர் விளையாட்டுக்கழகமும் முதலாம் இடம் பிறேடா விளையாட்டுக்கழகமும்-

**17வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டத்தில்-**

முதலாம் இடம் டென்கெல்வர் விளையாட்டுக்கழகமும் 2 ஆம் இடம் தமிழ் ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் 3 ஆம் இடம் ஸ்காகன் விளையாட்டுக்கழகமும் பெற்றுக் கொண்டன. வெற்றிபெற்ற கழகங்களுக்கு வெற்றிப் பதக்கங்களும் வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டு அனைத்து நிகழ்வும் இனிதே நிறைவெய்தின. (எ)

# சுவிஸில் நடைபெற்ற புத்தாண்டு விழா!





சுவிற்ஸர்லாந்து பேர்ன் அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோயிலில் வெகு சிறப்பாக மேழத்திங்கள் வேனிற்கால புத்தாண்டு வழிபாடு இடம்பெற்றுள்ளது.

இந்தப் பூஜை வழிபாடுகள் புத்தாண்டு தினத்தன்று காலை 9 மணியளவில் நடைபெற்றுள்ளன.

ஈழம் சிறந்து விளங்கப் பேர்ன் ஞானலிங்கேச்சுரர் வெண்பொரி ஞானாம்பிகை பாகன் இறையடி பணிந்து மண்ணில் நல்ல வண்ணம் உயிர்கள் வாழ வாழ்த்துகிறோம் எனும் வாழ்த்து ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில் அருட்சுனையர் தர்மலிங்கம் சசிக்குமாரால் வெளியிடப்பட்டது.

ஞானாம்பிகை உடைய ஞானலிங்கேச்சுரர் மற்றும் அன்னை திருமகள் திருவுலா வந்தருள சிறப்பு வழிபாடு நடைபெற்றது. இரவு 9.30 மணிக்கு இறையருள் பொருள்களும் அருள் அமுதும் வழங்கி வழிபாடுகள் நிறைவுற்றன. (எ)

## தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு!

வவுனியா, ஏப்.18

வவுனியா-வெளிக்குளம் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம் ஒன்று நேற்றுக் காலை 5மணியளவில் மீட் கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அவர்கள் அந்த இடத்துக்குச் சென்று சடலத்தை மீட்டுள்ளனர்.

வவுனியா வெளிக்குளம் பகுதியில் வசித்து வந்த பி. எம். சுகுமார் 61 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே தூக்கில் தொங்கிய நிலையில் வீட்டின் முன் பகுதியில் சடலமாகக் காணப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் உயிரிழந்த நபர் ஐந்து பிள்ளைகளின் தந்தை என்பதுடன் நில அளவைத் திணைக்களத்தில் முன்னர் பணியாற்றியவர் என்று கூறப்படுகின்றது.

மரணவிசாரணை அதிகாரி சடலத்தை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# சுதந்திரக்கட்சி அமைச்சர்களின் ஊழல்களை அம்பலப்படுத்த தயாராகிவரும் ஐ.தே.கவினர்!

கொழும்பு, ஏப்.18

ஊழல் மோசடிகளில் ஈடுபடும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களை அம்பலப்படுத்தும் முயற்சியில் ஐக்கிய தேசியக்கட்சியின்பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஆளும் கட்சியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்உறுப்பினர்களினால் வகிக்கப்படும் அமைச்சுப் பதவிகளில் நிலவும் பெரி யளவிலான ஊழல் மோசடிகள் தொடர்பில் இவ்வாறு அம்பலப்படுத்தப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசைநாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு இது பற்றித் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களுக்கு எதிராக மட்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் கூட்டு எதிர்க்கட்சியால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களால் மட்டும் ஊழல் மோசடிகள் இடம்பெறுகின்றன என்று மக்கள் மத்தியில் ஒரு பிரசாரம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தப் பிரசாரத்தை முறியடிக்கும் வகையில், சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களது ஊழல் மோசடிகள் அம்பலப் படுத்தப்படும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களது ஊழல் மோசடிகள் தொடர்பில் அறிந்து கொள்ள அந்த அமைச்சுக்களின் கீழ் செயற்பட்டு வரும் ஐக்கிய தேசியக் கட்சி பிரதி அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் உதவி பெற்றுக் கொள்ளப் படும்.

ஆளும் கட்சியின் மிக முக்கியமான சில அமைச்சுப் பதவிகளை சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் வகிக்கின்றார்கள்.

கடந்த காலத்தைப் போன்றே மக்கள் பணத்தை கோடிக்கணக்கில் விரயமாக்கும் தரப்பினர் இந்த அரசிலும் அங்கம் வகிக்கின்றனர்.

ஊழல் மோசடிகளில் ஈடுபடும் அமைச்சர்களுக்கு எதிராக உடனடியாக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கப் படும்.-என்றார். (எ)

## கழிவு முகாமைத்துவம் குறித்து இலங்கை மீது குற்றச்சாட்டு!

கொழும்பு, ஏப்.18

இலங்கையின் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் குற்றம் சுமத்தும் வகையில் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்தமை தொடர்பில் பல முக்கிய சர்வதேச ஊட கங்களில் செய்திகள் வெளியாகி உள்ளன.

அவற்றின் பல செய்திகளில் முறைசாரா கழிவு முகாமைத்துவம் காரணமாக இலங்கை ஓர் அசுத்தமான நாடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.


கழிவுகள் மறு சுழற்சி மேற்கொள்ளப்படாமல் உள்ளமை தொடர்பில் ஆச்சரியமடைவதாக அந்தச் செய்திகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

மேலும் இலங்கையை ஏளனம் செய்யும் வகையில் சர்வதேச ஊடகங்கள் பல்வேறு செய்திகளை வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில், கழிவு முகாமைத்துவம் இல்லாமையால் பல்வேறு நோய்கள் ஏற்படக் கூடும் என்பதால் வெளிநாட்டுச்சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவது தொடர்பில் பல அழுத்தங்கள் ஏற்படலாம் என்று துறைசார் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (எ)

## வில்பத்து வர்த்தமானி விவகாரம்: யானை பார்த்த குருடன் போல் சிலர்; முஸ்லிம் காங். நடவடிக்கை எடுக்கும்!

### அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



வர்த்தமானி அறிவித்தல் மூலம் மக்களின் குடியிருப்புக் காணிகள் வனபரிபாலன திணைக்களத்தின் பாதுகாக்கப்பட்ட இடமாக பிரகடனப்படும் நிலைவரம் காணப்பட்டால், அந்த எல்லைகளை மாற்றியமைப்பதற்கான முயற்சிகளை செய்வதற்கு நாம் தயாராக இருக் கிறோம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அபிவிருத்தி இலக்கின் இன்னுமோர் அடைவுத் தருணம் எனும் தலைப்பில் அண்மையில் சம்மாந்துறையில் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸின் பொதுக் கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வில்பத்து விவகாரத்தில் சிலர் விஷயம் தெரியாமல் விமர்சனங்களை செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த விடயத்தை வைத்து தங்களுடைய அரசியல் இலாபத்தை சம்பாதித்துக் கொள்ளலாம் என்பதற்காக எல் லாவற்றிலும் அநியாயம் நடக்கிறது என்பதை சொல்லவராமல், எங்களுடைய நியாயங்களை சொல்லி, நடந்த விடயங்களில் திருத்தங்களை செய்வதிலிருந்து இவர்கள் தவறிழைத்து வருகிறார் என்பதைத்தான் நாங்கள் பார்க்கிறோம்.

வில்பத்து விவகாரம் என்பது என்னவென்று தெரியாமல் சிலர், யானை பார்த்த குருடன் போல பெரிய கூட்டங்களை நடத்தி, அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். வில்பத்து விவகாரத்தில் இடம்பெற்ற விபரீதங்கள், அவற்றின் பின்னணி என்பவற்றை அறிந்துகொண்டு மிகவும் கவனமாகத்தான் முஸ்லிம் காங்கிரஸ் இந்த விடயத்தைக் கையாள வேண்டியிருக்கிறது.

யார் தவறிழைத்திருந்தாலும் சரி, புலம் பெயர்ந்த மக்கள், குறிப்பாக முசலி மக்கள் வில்பத்து விவகாரத்தால் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக அதிலுள்ள உண்மை நிலைவரங்களை நாம் ஜனாதிபதியின் செயலாளருக்கு தெளிவுபடுத்தியபோது அவர் அதனை பகிரங்கமாக ஏற்றுக் கொண்டார்.

வர்த்தமானி அறிவித்தல் மூலம் மக்களின் குடியிருப்புக் காணிகள் வனபரிபாலன திணைக்களத்தின் பாதுகாக்கப்பட்ட இடமாக பிரகடனப்படும் நிலைவரம் காணப்பட்டால், அந்த எல்லைகளை மாற்றியமைப் பதற்கான முயற்சிகளை செய்வதற்கு நாம் தயாராக இருக்கிறோம். எதிர்வரும் 27ஆம் திகதி சகல அதிகாரிகளுடன் கரடிக்குழி, மறிச்சுக்கட்டி ஆகிய பகுதிகளுக்குச் சென்று இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு தருவதாக கூறியிருக்கிறார்.-என்றார். (எ)

## கொழும்புக் கடலில் 'டெனிலா' சரக்குக் கப்பலில் ஏற்பட்ட தீயால் சூழலுக்குப் பெரும் அச்சுறுத்தல்!

கொழும்பு, ஏப்.18

கொழும்பிலிருந்து 11 மைல் கடல் தொலைவில் டெனிலா என்ற சரக்குக் கப்பலில் ஏற்பட்ட தீயை தற்போது வரையில் முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இது சூழலுக்குப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று சமுத்திர சூழல்பாதுகாப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர் டர்னி பிரதீப் குமார தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே டர்னி பிரதீப் குமார இதனைத் தெரிவித்துள்ளார்.


இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-


இந்த மாதம் 4 ஆம் திகதி,கொழும்பிலிருந்து 11 மைல் கடல் தொலைவில் டெனிலா என்ற சரக்குக் கப்பலில் தீ பரவியது.

அந்தத் தீயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இலங்கைக் கடற்படையினர் மற்றும் விமானப் படையினர் செயற்பட்டனர்.

இந்த எம்.ஏ.எஸ். டெனிலாகப்பலில்இருந்த கொள்கலன்களில்இருந்த இரசாயனப் பதார்த்தங்களே தீப்பற்றியுள்ளன. இதனால் சூழலுக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்படும். -என்றார். (எ)

# புத்தாண்டு நாளில் பாரம்பரிய விளையாட்டுக்கள்!





முல்லைத்தீவு, ஏப்.18


புதுவருடத் தினத்தன்று வற்றாப்பளை மங்களேசுவரா விளையாட்டுக் கழகம் பாரம்பரிய மாட்டு வண்டிச் சவாரி உள்ளிட்ட பல்வேறு ஊர் சார்ந்த விளையாட்டுப் போட்டிகளை நந்திக்கடல் வெளியில் முன்னெடுத்தது.

முல்லைத்தீவின் நந்திக் கடல் வெளியில் (மூன்றாங் கட்டை) பல நூற்றுக் கணக்கான மக்களின் முன்னிலையில் நடத்தப்பட்ட மாட்டு வண்டிப் போட்டி, உழவுந்துப் பெட்டியை கொழுவி பின்னோக்கிச் செலுத்துதல், தானியை பின்னோக்கிச் செலுத்துதல் என முற்றிலும் வேறுபட்ட விளையாட்டுக்கள், கலந்து கொண்ட மக்களின் கவனத்தை ஈர்த்தது.

இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக வட மாகாணசபை உறுப்பினர்கள் துரைராசா ரவிகரன் மற்றும் கந்தையா சிவநேசன், வற்றாப்பளை கோயில் தலைவர் மு.குகதாசன், கிராம அலுவலர் இ.இரவீந்திரா, வற்றாப்பளை பள்ளி முதல்வர் திருக்குமரன் உட்படப் பலர் கலந்து சிறப்பித்தனர். (எ)

# இரட்டை இலைச் சின்னம் பெறுவதற்கு லஞ்சம்: தினகரன் மீது டில்லி பொலிஸ் வழக்கு பதிவு!

## இடைத்தரகர் கைதானார்!



அ.தி.மு.கவின் அதிகாரபூர்வ இரட்டைஇலைச் சின்னத்தைப் பெற்றுக் கொள்ள லஞ்சம் வழங்கினார் என்ற குற்றச்சாட்டில் டி.டி.வி.தினகரன் மீது டில்லி பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். அதேவேளை, லஞ்சம் பெற்றார் என்ற சந்தேகத்தின் பேரில் டில்லியைச் சேர்ந்த இடைத் தரகர் ஒருவரும் கைது செய்யப் பட்டுள்ளார்.

கைதானநபரின்பெயர் சுகேஷ் சந்திரசேகரன் என்றும், அவரிட மிருந்து பெருந்தொகைப் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்றும் டெல்லி பொலிஸ் தெரிவித்துள்ளது.

### 1 கோடி ரூபா சிக்கியதா?

24 வயதான சுகேஷ் சந்திரசேகரனை தெற்கு டில்லியில் உள்ள ஒரு விடுதியில் இருந்து பிடித்தனர் எனவும் அவரிட மிருந்து 1.3 கோடி ரூபா பணம்பறிமுதல்செய்யப் பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இரட்டை இலைச்சின்னத்தை தங்கள் தரப்புக்கே பெற்றுத் தந்தால் ரூ.50 கோடி வரை லஞ்சம் தருவதாக தினகரன் தன்னிடம் வாக்குறுதி அளித்ததார் என அந்த நபர் பொலிஸாரிடம் கூறினார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### தினகரன் மறுப்பு:

இந்நிலையில், தினகரன் சென்னையில் நேற்றுத்திங்கட்கிழமை காலை செய்தியாளர் களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கையில்:-

டில்லியில் கைதான நபர் யாரென்றே எனக்குத் தெரியாது. சின்னம் பெற வேண்டும் என்பதற்காக நான் யாருக்கும் பணம் கொடுக்கவில்லை. இது தொடர்பாக டில்லியைச் சேர்ந்த யாரையும் நான் தொடர்பு கொள்ளவில்லை. இந்தப் பிரச்சினையை நான் சட்ட ரீதியாக அணுகுவேன். எமது கட்சியை அழிப்பதற்காக இது யாரோ சிலர் செய்யும் சதி. தமிழக சுகாதார அமைச்சர் விஜய பாஸ்கரை நீக்க வேண்டும் என யாரும் எனக்கு நெருக்கடி தர வில்லை. கட்சிக்குள் எந்த சலசலப்பும்இல்லை. - என்றார். (ச)

## வைகோவுக்கு மறியல் நீடிப்பு!



சென்னை,ஏப்.18

கடந்த 2009 ஆம் ஆண்டு இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசிய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவுக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப் பட்டுள்ளது.

சென்னை எழும்பூர் நீதிமன்றில் நேற்றுத் திங்கட்கிழமை இவரை ஆஜர்படுத்தியபோதே, இவருக்கான விளக்க மறியல் நீடிக்கப்பட்டது.

இதன் போது வைகோ ஊடகங்களுக்குகருத்துத் தெரிவிக்கையில்:-

பிரதமர் மோடி பன்னாட்டு நிறுவனங்களின் முகவராகச் செயற்படுகிறார். டில்லியில் போராடும் தமிழக விவசாயிகளை அவர் சந்திக்க மறுப்பது கண்டனத்துக்குரியது. மத்திய அரசு காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க மறுப்பதன் மூலம் தமிழகத்தை வஞ்சிக்கிறது. -என்றார். (ச)

## மைசூரில் தீப்பிழம்பு: மாணவன் பலி!

கர்நாடக மாநிலம் மைசூர் பகுதியில், நிலத்தில் ஏற்பட்ட தீப்பிழம்பில் கருகி 9 ஆம் தர மாணவன் பலியான சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மைசூர் சேத்தன அள்ளி கிராமத்தில் சோமண்ணா என்பவருக்கு சொந்தமானநாலரை ஏக்கர் நிலம் உள்ளது. இங்கு சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது அந்த நிலத்தின்ஒருபகுதியில்இருந்து புகை வந்துள்ளது. அந்த இடத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் அந்தப்பகுதியில் கல்லைத் தூக்கிப் போட்டுள்ளனர். இதையடுத்து நெருப்புப் பற்றி எரிந்துள்ளது.

அப்போது அந்த இடத்தில் காலை வைத்துப் பார்த்த அதே பகுதியை சேர்ந்த ஹர்சல் (வயது -14) என்ற சிறுவனுக்கு தீக்காயம் ஏற்பட்டது. அவரை உடனடியாக ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். எனினும், அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். புகை வந்த நிலத்தை தீயணைப்புப் படையினர் மற்றும் விஞ்ஞானிகள் பார்வையிட்டுள்ளனர். அந்த நிலத்தில் எரிவாயு போன்ற ஏதாவது இருக்கலாம் என்றும், அதிக வெப்பம்காரணமாக அந்த இடம் தீப்பிடித்து எரிந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அந்தப் பகுதியில் புகை வரக் காரணம் என்ன என்பது குறித்து விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ச)

## இரட்டை இலைக்கு பேரம்: தினகரன் பேசிய காணொலிப் பதிவு கிடைத்தது!

இரட்டை இலைச்சின்னத்தைதங்கள் அணிக்கே வழங்கக் கூறி பேரம் பேசியதாகத் தொடரப்பட்ட வழக்கில் டி.டி.வி. தினகரன்பேசிய காணொலிப் பதிவு கிடைத்துள்ளது என டில்லி காவல்துறை தெரிவித்துள்ளது.


டில்லியில் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்கியிருந்த சுகேஷ் சந்திரசேகர் என்பவரை கைது செய்த பொலிஸார், அவரிடம் இருந்து 1.30 கோடி ரூபாயையும், இரண்டு கார்களையும் பறிமுதல் செய்தனர்.

இது தொடர்பில் டில்லி காவல்துறையினர் கூறுகையில்:-

சுகேஷ் சந்திராவிடம் டி.டி.வி. தினகரன் பேசியதற்கான காணொலிப் பதிவுகள் கிடைத்துள்ளன. அதன் அடிப்படையில் விசாரணைகள் நடக்கின்றன்.

சுகேஷ் சந்திரா, தேர்தல் ஆணைய அதிகாரிகள் யாரையாவது தொடர்பு கொண்டு பேசியுள்ளாரா என்பது குறித்தும் விசாரணை நடத்தப்படுகிறது. -என்றனர். (ச)

## டில்லியில் தமிழக விவசாயிகள் வளையல் உடைத்துப் போராட்டம்!



டில்லி,ஏப்.18

விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். நதிகளை இணைக்க வேண்டும் மற்றும் காவிரி மேலாண்மை வாரியம். அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக விவசாயிகள் டில்லியில் வளையல் உடைத்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை போராட்டம் நடத்தினர்.

கடந்த ஒன்றரை மாதங்களாக நாள் தோறும் வித்தியாசமான போராட்டங்களை விவசாயிகள் நடத்தி வருகின்றனர். அந்தவரிசையில் பெண்கள் வேடமணிந்த விவசாயிகள் வளையல்களை உடைத்தும், நெற்றியில் அணிந்த குங்குமத்தை அழித்தும் கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்தினர்.

இது தொடர்பில் விவசாயிகள் தெரிவிக்கையில்:-

தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் மனைவியர் நிலையை சித்திரிக்கும் வகையில் வளையல்களைஉடைத்து போராட்டத்தை நடத்தியுள்ளோம். பிரதமர் நரேந்திர மோடி எங்களை அழைத்து விவசாயிகளின் பிரச்சினைகளைக் கேட்டறிய வேண்டும். அவர் அழைக்கும் வரை எங்கள் போராட்டம் தொடரும். -என்றனர். (ச)

## அந்நியச் செலாவணி மோசடி: சிதம்பரத்தின் மகனுக்கு 'நோட்டீஸ்'!

அந்நியச் செலாவணி மோசடி முறைப்பாடு தொடர்பாக முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரத்துக்கு அமலாக்கத்துறை நோட்டீஸ் அனுப்பியுள்ளது. பெமா சட்டவிதிகளின்படி கார்த்தி சிதம்பரத்திடம் விளக்கம் கோரியே மேற்படி நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

45 கோடி ரூபா அளவில் அந்நியச் செலாவணி மோசடியில் கார்த்தி சிதம்பரம் ஈடுபட்டுள்ளார் என முறைப்பாடு எழுந்ததையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், அட்வான்டேஜ் ஸ்ட்ராடஜிக் கன்சல்டிங் பிறைவேட் லிமிட்டெட் நிறுவனத்துக்கும் விளக்கம் கோரி அமலாக்கத்துறை நோட்டீஸ் அனுப்பியுள்ளது. இந்த நிறுவனத்தின் நிர்வாகக் குழுவில் கார்த்தி சிதம்பரம் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)

## பசுவைக் கொன்றதற்கு பரிகாரம்: 5 வயதுச் சிறுமிக்கு திருமணம்!

### பஞ்சாயத்தில் அதிரடித் தீர்ப்பு

மத்தியப் பிரதேசம் குணா மாவட்டத்தில் பசுவின் கன்றைக் கொன்றதற்காக சம்பந்தப்பட்ட நபரின் 5 வயது மகளுக்குத் திருமணம் செய்ய வேண்டும் என பஞ்சாயத்தில் தீர்ப்பளிக்கப் பட்டுள்ளது.

கடந்த 4 மாதங்களுக்கு முன்பு வயலில் மேய்ந்து கொண்டிருந்த பசுவின் கன்றை விரட்ட நினைத்த பிரஸ்தாப சிறுமியின் தந்தை அதைக் கல்லால் தாக்கியுள்ளார். இதன்போது அந்தக் கன்று உயிரிழந்து விட்டது. இதையடுத்து, அந்தச் சமூகத்தினர் சார் பில் பஞ்சாயத்து கூட்டப்பட்டது. இதில், சிறுமியின் குடும்பத்தினர் புனித யாத்திரை மேற்கொள்ள வேண்டும் என்றும், கிராமத்தினர் அனைவருக்கும் விருந்து படைக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதற்கு சிறுமியின் குடும்பத்தினர் சம்மதம் தெரிவித்தனர். பின்னர், பஞ்சாயத்து தரப்பில் மற்றோர் உத்தரவுப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிராமத்தில் திருமண வயதைக் கடந்தும் பல இளைஞர்களுக்கு திருமணம் நடக்கவில்லை என்றும், இதற்கு பசுவின் கன்று கொல்லப்பட்டது தான் காரணம் என்றும் தெரிவித்துள்ளனர். இதற்குப் பரிகாரமாக கன்றைக் கொன்ற நபரின் 5 வயது மகளுக்கும், விடிஷா மாவட்டத்தைச் சேர்ந்த 8 வயது சிறுவனுக்கும் திருமணம் செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இதற்கு சம்மதிக்காத மேற்படி சிறுமியின் தாய் குணா மாவட்ட ஆட்சியகத்துக்கு வந்து முறைப்பாடு செய்துள்ளார் .இதையடுத்து, குற்றவியல் நடைமுறை விதிகளின்படி சிறுவனின் தந்தை உட்பட தீர்ப்பு வழங்கிய பஞ்சாயத்தினர் நால்வருக்கு தலா 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இதையும் மீறி குழந்தை திருமணம் நடைபெற்றால், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் எச்சரித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# துருக்கியில் அரசமைப்புத் திருத்தம்; வெற்றியில் முடிந்த பொது வாக்கெடுப்பு!




அங்காரா, ஏப். 18

துருக்கி நாட்டில் ஜனாதிபதிக்கு அதிக அதிகாரம் வழங்க வகை செய்யும் அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் பொது மக்களிடையே நடத்தப்பட்ட பொது வாக்கெடுப்பு வெற்றியில் முடிந்துள்ளது.

துருக்கியில் நாடாளுமன்ற ஜனநாயக முறை அமுலில் உள்ளது. அங்கு அடிக்கடி இராணுவப் புரட்சிஏற்பட்டுநாடு பாதிப்புக்குள்ளாகி வருகிறது.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் உருவான இராணுவப் புரட்சியை ஜனாதிபதி தயீப் எர்டோகன் பொதுமக்கள் உதவியுடன் முறியடித்தார்.

எனவே, அங்கு நாடாளுமன்ற ஆட்சிமுறையை ஒழித்துவிட்டு அதிகாரங்கள்குவிகின்ற ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்டுவர எர்டோகன் திட்டமிட்டார். அதற்கு ஏற்ற வகையில் அரசியல் சாசனம் திருத்தம் செய்ய நாடாளுமன்றத்தில்பிரேரணைநிறைவேறியது.

இருந்தாலும் இது தொடர்பாக மக்கள் கருத்தறிய பொது வாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. அதில் 5 கோடியே 50 லட்சம் மக்கள் வாக்களித்தனர். வாக்குப் பதிவு முடிந்து வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது.

மொத்தம் 99.45 சதவீதம் வாக்குகள் எண்ணப்பட்டன. அதில் ஜனாதிபதி ஆட்சி முறைக்கு 51.37 சதவீதம் பேரும், நாடாளுமன்ற ஆட்சி முறைக்கு 48.63 சதவீதம் பேரும் வாக்களித்து இருந்தனர்.

அதையடுத்து, ஜனாதிபதி ஆட்சி முறைக்கு ஆதரவாக மக்கள் வாக்களித்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

இதன் மூலம் துருக்கியில் ஜனாதிபதிக்கு அதிகாரம் அதிக அளவில் கூடியுள்ளது. மேலும் தயீப் எர்டோகன் எதிர்வரும் 2029 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதிப் பதவியில் நீடிப்பார்.

எம்.பி. பதவிக்கான வயது வரம்பு 25 இல் இருந்து 18 ஆகக் குறைக்கப்படும். நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 550 இல் இருந்து 600 ஆக உயர்த்தப்படும்.

பொதுவாக்கெடுப்பு வாக்குகள் எண்ணிக்கை முடிவு அறிவிக்கப்பட்டதும் ஜனாதிபதி எர்டோகனின் ஆதரவாளர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும் வீதிகளில் ஆடிப்பாடி மகிழ்ந்துள்ளனர்.

அதே நேரத்தில் குடியரசு மக்கள் கட்சி உள்ளிட்ட 2 எதிர்க்கட்சிகள் பொது வாக்கெடுப்பு முடிவை ஏற்க முடியாது என அறிவித்துப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வாக்கு எண்ணிக்கையில் முறைகேடு நடந்துள்ளது. முத்திரையிடப்படாத வாக்குச் சீட்டுக்களையும் சேர்த்து வெற்றி பெற்றுள்ளது என்று அறிவிததுள்ளனர்.

எனவே, 60 சதவீதம் வாக்குகளை மீண்டும் எண்ண வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சிரியாவில் போரை முடிவுக்கு கொண்டு வாருங்கள்!




வத்திக்கான், ஏப். 18

சிரியாவில் இடம்பெற்று வரும் போரை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என பாப்பாண்டவர் உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

ஈஸ்டர் பண்டிகையையொட்டி பாப்பாண்டவர் பிரான்சிஸ், வத்திக்கான் நகரில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தில் நேற்று முன்தினம் சிறப்புப் பிரார்த்தனையில் ஈடுபட்டார். இதில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

அதைத்தொடர்ந்து அவர் ஆற்றிய ஈஸ்டர் தின உரையில், அண்மையில்சிரியாவில் விஷ வாயு தாக்குதலில் 100 இற்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டமை குறித்து உருக்கத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு:-

போர், பஞ்சம், அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாமை ஆகியவற்றால் உலகின் பல நாடுகள் பாதிக்கப்பட்டு உள்ளன.

சிரியா நாட்டு மக்கள் மீது தொடர்ந்து பயங்கரம் விதைக்கப்படுகிறது. அவர்கள் மரணத்தைச் சந்தித்து வருகின்றனர். தப்பியோடிய சிரியா அகதிகள் மீது மிக இழிவான தாக்குதலும் நடத்தப்பட்டு உள்ளது.

இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வரவேண்டும். இதேபோல் இயேசுநாதர் அவதரித்த புனித பூமி மற்றும் ஈராக், ஏமன் ஆகிய மத்திய கிழக்குநாடுகள்அனைத்திலும் அமைதி நிலவிடவேண்டும்.

உலக நாடுகளின் தலைவர்கள் ஆயுத வியாபாரத்தைக் கைவிட்டு அமைதியை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.- என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## குழந்தை பருவத்தில் பிரிந்த இரட்டையர்கள் கணவன் மனைவி ஆக இணைந்த அதிசயம்!



வொஷிங்டன், ஏப். 18

அமெரிக்காவில் குழந்தை பருவத்தில் பிரிந்த இரட்டையர்கள் கணவன்-மனைவி ஆக இணைந்தமை 'டி.என்.ஏ' பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

அமெரிக்காவின் மிஸ்சிசிப்பி மாகாணத்தில் ஜாக்சன் பகுதியைச் சேர்ந்த 33 வயது கணவனும் மனைவியும் திருமணமாகி நீண்டநாள்களாகியும் குழந்தை பாக்கியம் இல்லாத காரணத்தால் செயற்கை முறையில் கருத்தரிப்புச் செய்ய இவர்கள் டி.என்.ஏ. சோதனை நடத்தினர். இவர்களது இருவரின் ரத்த மாதிரியும் பரிசோதிக்கப்பட்டது.

பரிசோதனையில் இவர்கள் இருவரும் உடன் பிறந்த இரட்டையர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால் அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்த மருத்துவர்கள் முதலில் இதை நம்பவில்லை. பல தடவை மாறி மாறி பரிசோதித்ததில் இருவரும் அண்ணன்-தங்கை என்பது உறுதியானது.

இது குறித்து அவர்களிடம் விசாரிக்கப்பட்டது. இவர்கள் குழந்தைகளாக இருந்த போது பெற்றோர் கார்விபத்தில் பலியாகி விட்டனர்.

பின்னர் இருவரும் பிரிக்கப்பட்டு வெவ்வேறு குடும்பத்தில் வளர்ந்துள்ளனர். சந்தர்ப்ப சூழ்நிலையால் இருவரும் திருமணம் மூலம் கணவன்-மனைவி ஆகியுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

## ட்ரம்ப்பின் வருமான வரி கணக்கு வெளியிட வலியுறுத்தி 150 இடங்களில் பேரணி!




அமெரிக்காவில் ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப்பின் வருமான வரிக் கணக்கு விவரங்களை வெளியிடவேண்டும் என்று வலியுறுத்தி 150 இடங்களில் போராட்டக்காரர்கள் பேரணிகளை நடத்தியுள்ளனர்.

அமெரிக்க நாட்டில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிற வேட்பாளர்கள் வருமான வரி கணக்கு விவரங்களை வெளியிடும் மரபு கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது.

ஆனால், அதைப் பின்பற்றி, தனது வருமான வரி கணக்கை வெளியிட முடியாது என்று ஜனாதிபதித் தேர்தலின்போது குடியரசு கட்சி வேட்பாளராக களமிறங்கிய ரொனால்ட் ட்ரம்ப் கூறியிருந்தார்.

இது அங்கு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இப்போது அவர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று, பதவி ஏற்றுள்ளார்.

இந்நிலையில், கடந்த மாதம் அவரது 2005 ஆம் ஆண்டு வருமான வரி கணக்கு விவர அறிக்கையை அமெரிக்காவின் 'எம்.எஸ்.என்.பி.சி.' டி.வி.சனல் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியது.

அதில் ட்ரம்ப் தனது வருமானம் 150 மில்லியன் டொலர் (சுமார் 1,005 கோடி இந்திய ரூபா) எனக் கூறி, 38 மில்லியன் டொலர் (சுமார் 254 கோடி இந்திய ரூபா) வருமான வரி செலுத்தியமை அம்பலத்துக்கு வந்தது.

இந்த நிலையில், அமெரிக்காவில் ஜனாதிபதி வருமான வரி கணக்கு விவரங்களை வெளியிடும் அவசியம், சட்டப்பூர்வமாக இல்லை என்ற போதும், ட்ரம்ப் தனது வருமான வரி கணக்கு விவரங்களை அதிகாரபூர்வமாக வெளியிட வேண்டும் என்ற குரல் வலுத்து வருகிறது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அமெரிக்கா முழுவதும் 150 இடங்களில் போராட்டக்காரர்கள் பேரணிகள் நடத்தியுள்ளனர். அங்கு வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதற்கான காலக்கெடு நெருங்கிவிட்ட நிலையில், இந்தப் பேரணிகள் நடந்திருப்பது முக்கியத்துவம் பெறுகிறது.

# ஆஸ்திரேலிய முன்னணி தொடரில் இலங்கை வலைப்பந்து நட்சத்திரம்!

## சிவலிங்கம் தர்ஜினி




கொழும்பு, ஏப்.18

இலங்கையின் வலைப்பந்தாட்ட நட்சத்திரம் சிவலிங்கம் தர்ஜினி, ஆஸ்திரேலியாவின் முன்னணி கழக அணியான சிற்றி வெஸ்ட் பெல்கொன் அணிக்கு விளையாடுவதற்காக ஆறு மாத கால ஒப்பந்த அடிப்படையில் ஆஸ்திரேலியா பயணமாகின்றார்.

யாழ்ப்பாணம் ஈவினையைப் பிறப்பிடமாகக் கொண்ட தர்ஜினி, தனது பள்ளிக்கல்வியை வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து கிழக்கு பல்கலைக் கழகத்திற்கு நுழைந்தார். அங்கு வலைப்பந்தாட்டம் விளையாட ஆரம்பித்த இவர் மிகவும் குறுகிய காலத்தில் இலங்கை வலைப்பந்தாட்ட தேசிய அணியின் நட்சத்திரமாக உருவெடுத்தார்.

உலகின் முதல்தர வலைப்பந்தாட்ட வீராங்கனையான தர்ஜினி சிவலிங்கம் ஆஸ்திரேலியாவுக்கு மேற்கொள்ளும் சுற்றுப்பயணம் குறித்த அறிவிப்பை அவரது முகாமையாளர் கோபிநாத் தெரிவித்தார்.

கடந்த, 2011ஆம் ஆண்டு வலைப்பந்தாட்ட உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் சிறந்த ஷூட்டர் விருதினைப் பெற்ற தர்ஜினி, கடந்த ஒரு வருட காலமாக இலங்கை தேசிய அணி சார்பாக எந்தவொரு போட்டியிலும் பங்கெடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 10 வருடங்களுக்கு மேலாக இலங்கை வலைப்பந்தாட்ட அணிக்காக ஆடிவந்த தர்ஜினி, கடந்த ஒரு வருட காலமாக போட்டிகளில் பங்கெடுக்காது விலகியிருந்தமை இலங்கை அணிக்கு சர்வதேசப் போட்டிகளில் பெரும் சவாலாக இருந்த அதேவேளை, பலரை ஏமாற்றத்திற்கும் உள்ளாக்கியிருந்தது.

இலங்கை வலைப்பந்தாட்ட அணியின் முன்னாள் பயிற்றுவிப்பாளரும் தற்போதைய புருனே அணியின் பயிற்றுவிப்பாளருமான திலகா ஜினதாஸ மற்றும் தர்ஜினியின் முகாமையாளரான கோபிநாத் ஆகியோரினது முயற்சியினால் தாஜினிக்கு இந்த வாய்ப்பு கிட்டியுள்ளது.

தர்ஜினி தனது இந்த ஆறு மாதகால பயணத்தின் போது, ஆஸ்திரேலியாவின் மெல்போர்னிலிருந்து சிற்றி வெஸ்ட் பெல்கொன் அணி மற்றும் சென். அல்பன்ஸ் வலைப்பந்தாட்டக் கழகம் ஆகியவற்றிற்காக விளையாடவுள்ளார்.

அதேவேளை, ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீராங்கனையும் பயிற்றுவிப்பாளருமான நிக்ஹோலி நிச்சர்ட்சனின் பயிற்றுவிப்பின் கீழ் தன்னை தயார்படுத்துவுள்ளமை முக்கிய விடயமாகும்.

மேற்படி சுற்றுப்பயணம் தொடர்பாக தர்ஜினி சிவலிங்கம் தெரிவித்தவை வருமாறு:-

நான் ஆஸ்திரேலியாவின் முதல்தர கழகத்திற்கு விளையாட இருப்பதையிட்டும், அங்கு சிறந்த நிபுணரின் கீழ் பயிற்றுவிக்கப்படுவதையிட்டும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாய்ப்பை ஏற்படுத்தித்தந்த திலகா ஜினதாஸ, கோபிநாத் மற்றும் ஆலோசனை வழங்கிய ஏனையோருக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்னுடைய இலக்கு எப்போதும் இலங்கையின் வலைப்பந்தாட்டத்தை அடுத்த நிலைக்குக் கொண்டுசெல்வதேயாகும். நான் ஆறு மாதகால பயிற்சியின் பின்னர் தாயகம் திரும்பி இலங்கை தேசிய அணிக்கு என்னால் இயலுமான பங்களிப்பை வழங்குவேன்.- என்றும் உறுதியுடன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தர்ஜினியின் முகாமையாளர் கோபிநாத் தெரிவித்தவை வருமாறு:-

வலைப்பந்தாட்ட உலகின் ஜாம்பவான்களாக வலம் வரும் ஆஸ்திரேலிய கழகம் ஒன்றிற்கு இலங்கையிலிருந்து ஒரு வீராங்கனை விளையாடுவது இதுவே முதல் தடவை.

தர்ஜினிக்கு தன்னார்வலர்களால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள இது போன்ற வாய்ப்பினை எதிர்காலத்தில் ஏனையோருக்கும் உருவாக்கிக் கொடுக்க இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனம் மற்றும் விளையாட்டு அமைச்சு ஆகியன நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுற்றுப் பயணத்தை முடித்து நாடு திரும்பும் வேளை தர்ஜினிக்கு இலங்கை வலைப்பந்தாட்டத்தில் உரிய இடம் வழங்கும் அதேவேளை, இலங்கையின் வலைப்பந்தாட்ட வளர்ச்சி தொடர்பாகவும் சிந்திக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# குஜராத்தை வீழ்த்தியது மும்பை இந்தியன்ஸ்!



மும்பை, ஏப். 18

வான்கடே மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் குஜராத் லயன்ஸ் அணியை 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி நான்காவது வெற்றியைப் பதிவு செய்தது மும்பை இந்தியன்ஸ்.

மும்பை வான்கடே மைதானத்தில் மும்பை இந்தியன்ஸ் - குஜராத் லயன்ஸ் அணிகளுக்கு இடையிலான போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணியின் தலைவர் ரோகித் சர்மா களத்தடுப்பைத் தேர்வு செய்தார். அதன்படி குஜராத் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. மக்கலம் (66 ஓட்டங்கள்), தினேஷ் கார்த்திக் (48 ஓட்டங்கள் ஆட்டம் இழக்காமல்) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 176 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் 177 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை இந்தியன்ஸ் அணியின் பார்தீப் பட்டேல், பட்லர் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.


ஆட்டத்தின் 2 ஆவது பந்தில் பட்டேல் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் 'டக்அவுட்' ஆனார்.

அடுத்து பட்லர் உடன் ராணா ஜோடி சேர்ந்தார். இந்தத் தொடரில் அசத்தி வரும் ராணா இந்தப் போட்டியிலும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 36 பந்துகளில் 53ஓட்டங்கள் சேர்த்து ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த பொல்லார்ட் அதிரடியாக விளையாடி 23 பந்துகளில் 39 ஓட்டங்கள் சேர்த்தார். இதற்கிடையே பட்லர் 26 ஓட்டங்களில் வெளியேறினார்.

அணித் தலைவர் ரோகித் சர்மா ஆட்டம் இழக்காமல் 29 பந்துகளில் 40 ஓட்டங்கள் சேர்க்க மும்பை இந்தியன்ஸ் 19.3 ஓவர்களில் 177 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த ஐ.பி.எல்லில் ஐந்து போட்டிகளில் விளையாடியுள்ள மும்பை இந்தியன்ஸ் அணிக்கு, இது நான்காவது வெற்றியாகும். முதல் போட்டியில் தோல்வியடைந்தபின் தொடர்ச்சியாக நான்கு வெற்றிகளைப் பெற்றுள்ளது.

# 27 ஓட்டங்களால் பெங்களூரை வீழ்த்தியது புனே அணி!



பெங்களூர், ஏப். 18

ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் அணிக்கு எதிரான லீக் போட்டியில் ரைசிங் புனே அணி 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் மற்றும் ரைசிங் புனே அணிக்களுக்கு இடையிலான லீக் போட்டி பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூர் அணி கப்டன் விராட் கோஹ்லி முதலில் பந்து வீசத் தீர்மானித்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் புனே அணி 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 161 ஓட்டங்கள் எடுத்தது. புனே அணியில் அதிக பட்சமாக தொடக்க வீரர்கள் திரிபாதி 31, ரகானே 30 ஓட்டங்கள் எடுத்தனர். அதேபோல், அணித் தலைவர் ஸ்மித் 28, டோனி 27 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். இறுதியில் மனோஜ் திவாரி 11 பந்துகளில் 27 ஓட்டங்கள் விளாசினார்.

இதனையடுத்து, 162 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய பெங்களூர் அணியில் தொடக்க வீரர் மன்தீப் 'டக் அவுட்' ஆகி வெளியேறினார். பின்னர் அணித்தலைவர் விராட் கோஹ்லியும், டிவில்லியர்ஸும் இணைந்து ஓட்டங்களைச் சேர்த்தனர்.

அதிரடியாக விளையாடிய கோஹ்லி 19 பந்துகளில் 28 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இம்ரான் தாஹிரின் அபார பந்து வீச்சில் டோனியில் வேகமான 'ஸ்டம்பிங்கில்' டி வில்லியர்ஸும் தனது விக்கெட்டைப் பறிகொடுத்தார். இதனால் பெங்களூர் அணிக்கு நெருக்கடி ஏற்பட்டது.

ஆனால், கேதர் ஜாதவ்(18 ஓட்டங்கள்), வாட்சன்(14 ஓட்டங்கள்), பின்னி(18 ஓட்டங்கள்), நெகி(10 ஓட்டங்கள்) என்ற அடுத்தடுத்து தங்களது விக்கெட்டுகளை பறி கொடுத்து வெளியேறினர்.

இறுதியாக பெங்களூர் அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 140 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதனால், புனே அணி 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது.

புனே அணியில் பென்ஸ்ஸ்டோக் அபாரமாக பந்து வீசி 4 ஓவர்களில் 18 7 ஓட்டங்கள் மட்டும் விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டுகளை சாய்த்தார். அதே போல், தாக்கூர் 3 விக்கெட்டுகளை எடுத்தார். உனட் கட் 4 ஓவர்களில் 25 7 ஓட்டங்கள் மட்டும் விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுகளை எடுத்தார்.

5 போட்டிகளில் விளையாடியுள்ள ரைசிங் புனே அணி 2 ஆவது வெற்றியைப் பெற்றுள்ளது. பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி தனது 4 ஆவது தோல்வியை பதிவு செய்தது. 3 முக்கிய விக்கெட்டுகளை சாய்த்த பென்ஸ்ஸ்டோக் ஆட்ட நாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.



## தேசிய மட்ட சதுரங்கப் போட்டிக்கு 49 கிளிநொச்சி மாணவர்கள் தெரிவாகினர்

இலங்கை சதுரங்கச் சம்மேளனத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட இளையோர் சதுரங்கப் போட்டிக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 49 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டச் சதுரங்கச் சங்கத்தின் ஒழுங்குபடுத்தலில் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தின் ஆதரவுடன் கடந்த 11 ஆம் மற்றும் 12 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட இளையோர் சதுரங்கப் போட்டிகளில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவு செய்யப்பட்டவர்கள் 17 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை கொழும்பு டீ.எஸ். சேனநாயக்கா கல்லூரியில் நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் விவரம் வருமாறு:-

**8 வயதின் கீழ் ஆண்கள்**

1 ஆம் இடம்- ச.மதுமிலன் - கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்.

2 ஆம் இடம் - சி.தமிழ்குமரன்- கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்.

3 ஆம் இடம் ரி.பினோஜன் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

**8 வயதின் கீழ் பெண்கள்**

1 ஆம் இடம்- பு.நந்துஷா - கிளிநொச்சி விவேகனந்தா வித்தியாலயம்.

2 ஆம் இடம் - பா.வட்ஷிகா - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

3 ஆம் இடம் நி.பம்ஷிகா - சோரன்பற்று சீ.சீ.த.க. பாடசாலை.

4 ஆம் இடம் - கே. லதுர்ஜிகா- மாசார் அ.த.க.பாடசாலை.

5 ஆம் இடம்- எஸ். ஜாதவி - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

**10 வயதின் கீழ் ஆண்கள்**

1 ஆம் இடம்- ஜே.பிறேம்டிலக்ஷ்ன் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

2 ஆம் இடம் - சி.மகிழன்பன் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

3 ஆம் இடம் - கி.பானுஜன் - கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்.

4 ஆம் இடம்- எஸ். கிருஷாந் - கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்.

**10 வயதின் கீழ் பெண்கள்**

1 ஆம் இடம்- பு.கலை யிசை - கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயம்.

2 ஆம் இடம் - ஜே.யாழவி - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

3 ஆம் இடம் பா.துளசிகா - கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்.

4 ஆம் இடம்- எம். வைகா- கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

**12 வயதின் கீழ் ஆண்கள்**

1 ஆம் இடம்- கு. சங்கீர்த்தன் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

2 ஆம் இடம் - சி.பிரணவன் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

3 ஆம் இடம் - ரீ. நவீனன் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

4 ஆம் இடம்- எம். நித்திலன் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

5 ஆம் இடம் - எஸ். நிதுஷன் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

**12 வயதின் கீழ் பெண்கள்**

1 ஆம் இடம்- ஜே.கபீஷ்ணா - இராமநாதபுரம் மகா வித்தியாலயம்.

2 ஆம் இடம் - மோ.வானதி - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

3 ஆம் இடம் - எம். மருணிதா - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

4 ஆம் இடம் - ப.கிசோரிகா - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

5 ஆம் இடம்- கே.மயூரதா - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

6 ஆம் இடம்- கௌ. பிறையினி - பளை மத்திய கல்லூரி.

**14 வயதின் கீழ் ஆண்கள்**

1 ஆம் இடம்- பா.கம்சிகன் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

2 ஆம் இடம் - ஈ.ஜதுர்ஷன் - இராமநாதபுரம் மகா வித்தியாலயம்.

3 ஆம் இடம் - ஆர்.பிரதாபன் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

4 ஆம் இடம் - வி.தர்ஷிகன் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

5 ஆம் இடம்- சே. சிவகுமாரன் - வட்டக்கச்சி மத்திய கல்லூரி.

6 ஆம் இடம்- கே.கிசேரன் - பளை மத்திய கல்லூரி.

7 ஆம் இடம் - சி.கவிசாந் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

8 ஆம் இடம் - எம்.நோஜன் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

**14 வயதின் கீழ் பெண்கள்**

1 ஆம் இடம்- கௌ. தமிழிசை - பளை மத்திய கல்லூரி.

2 ஆம் இடம்- க.றஜீனா - இராமநாதபுரம் மகா வித்தியாலயம்.

3 ஆம் இடம் - வி.றக்ஷிகா - புனித திரேசா பெண்கள் கல்லூரி.

**16 வயதின் கீழ் ஆண்கள்**

1 ஆம் இடம்- ஜே.பிரவிந்தன் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

2 ஆம் இடம் - சி.விக்னேஷ் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

3 ஆம் இடம் - எம். குயிலன் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

4 ஆம் இடம் - த.இளங்கோபன் -கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

5 ஆம் இடம்- உ.ஹரிராம் - திருவையாறு மகா வித்தியாலயம்.

**16 வயதின் கீழ் பெண்கள்**

1 ஆம் இடம்- பி.மதுசனா - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

2 ஆம் இடம் -கெ.பிரம்மிகா - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

3 ஆம் இடம் - எம். புகழினி - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

**18 வயதின் கீழ் ஆண்கள்**

1 ஆம் இடம்- எஸ். டனுஷியன் - அக்கராயன் மகா வித்தியாலயம்.

2 ஆம் இடம் - சே.மயூரன் - வட்டக்கச்சி மத்திய கல்லூரி.

**18 வயதின் கீழ் பெண்கள்**

1ஆம் இடம் - எஸ். கஜானி - கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

**16 வயதின் கீழ் பெண்கள்**

1 ஆம் இடம்- பி.மதுசனா - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

இம் மாணவர்கள் பங்கு பற்றவுள்ள தேசிய மட்ட இளையோர் சதுரங்கப் போட்டிகள் சர்வதேச சதுரங்க தரப்படுத்தல் பட்டியலுக்கு ரேட்டிங்கிற்கு உட்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்போட்டிகள் கடந்த வருடம் முதல் முறையாக கிளிநொச்சியில் நடைபெற்றதுடன் 53 பேர் தேசிய மட்டப்போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டு அதில் ஒருவர் சர்வதேச சதுரங்கத் தரப்படுத்தல் பட்டியலில் இடம்பிடித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

-இவ்வாறு பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடந்த சந்திப்பின்போது அழுத்தமாகவலியுறுத்திக் கூறியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

நேற்றுமுற்பகல் 11மணியளவில் பாதுகாப்பு அமைச்சின் செயலகத்தில், பாதுகாப்பு அமைச்சின்செயலாளர்மற்றும் முப்படைத் தளபதிகளுடன் வடக்கில் படையினர் வசமுள்ள காணி விவ்காரம் குறித்துக் கூட்டமைப்பு பேச்சு நடத்தியது. இந்தச் சந்திப்புத் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுப் பிற்பகல் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நடைபெற்றது.

அங்கு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்தலைவருமான இரா. சம்பந்தன்உரையாற்றும்போது தெரிவித்தவை வருமாறு :-

வடக்கில் படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் குழுவுக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் முப்படைத் தளபதிகளுக்கும் இடையிலான சந்திப்பு இன்று (நேற்று) முற்பகல் 11 மணியளவில் பாதுகாப்பு அமைச்சின் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தச்சந்திப்புக்கு முன்னர் - கடந்த சனிக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் நானும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து வடக்கில் படையினர் வசமுள்ள காணிகள் தொடர்பில் கலந்துரையாடினோம். இதன்போது காணிகள் உடன் விடுவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து ஜனாதிபதிக்குத் தெளிவாக எடுத்துரைத்திருந்தோம்.

இந்த விடயங்களையே இன்று (நேற்று) இடம்பெற்ற சந்திப்பிலும் வலியுறுத்தினோம். போர்ஆரம்பித்த காலத்தில்தமிழீழ விடுதலைப்புலிகளால் இராணுவத் தளங்கள் தாக்கப்படலாம்என்றஅடிப்படையில்உயர் பாதுகாப்புவலயங்கள்வடக்கில் அமைக்கப்பட்டன.

தற்போது போர் நிறைவடைந்துவிட்டது. புலிகளும் இல்லை; அவர்கள் அழிக்கப்பட்டுவிட்டனர். போர்நடைபெற்ற போது மக்களிடமிருந்து காணிகள் படையினரால் கைப்பற்றப்பட்டிருந்தன. பின்னர் புலிகள் வசமிருந்த காணிகளையும் படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர்.

இவை மக்கள்நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்துவந்த காணிகளாகும். அரசின் காணிப் பத்திரமும் சில காணிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. எனவே, அந்தக் காணிகளை உடன் திருப்பிக் கொடுக்கவேண்டியது அரசின் கடமையாகும். மக்கள் அந்தக் காணிகளில் வாழும் உரித்தை உடையவர்கள். இதனைவழங்க அரசு மறுப்பது தவறாகும் என்று நாங்கள் இந்தச் சந்திப்பில் வலியுறுத்தினோம்.

### காணிகளை விடுவிக்க நாம் தயார்

இதற்குப் பதிலளித்த இராணுவத்தளபதி, "மக்களின்காணிகளை வைத்திருக்கும் அதிகாரம் எங்களுக்கு இல்லை. இதனை முடிவு செய்ய வேண்டியது ஜனாதிபதியும் பாதுகாப்புச் செயலாளரும். எங்களுக்குக் கட்டளையிட்டால் நாங்கள் அந்தக் காணிகளை விடுவிக்கத் தயார்" என்று கூறினார்.

இதேவேளை, கேப்பாபிலவு, முசலி, முள்ளிக்குளம் உள்ளிட்ட சில இடங்களில் மக்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்து வரும்நிலமீட்புப்போராட்டங்கள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் எடுத்துரைத்தோம்.

கேப்பாபிலவிலுள்ள குறிப்பிட்டளவு காணிகளை விடுவிக்க இராணுவம்தயாராகிவருவதாக அறியமுடிந்தது. என்றாலும், இதிலுள்ள முக்கிய பிரச்சினை, இராணுவத் தளம் அமைந்துள்ள பிரதேசத்தில் இராணுவத்துக்குத் தேவையான ஏனைய வசதிகள் உள்ளன எனக் கூறப்படுகின்றது. என்றாலும், மக்களும் அந்தக் காணிகளில்குடியேறவேண்டும்என்று கூறுகின்றனர். இராணுவத்தினர் குறித்த பகுதியில் சிறு பகுதி காணியைக் கோருகின்றனர். உடனடியாகவெளியேறக்கூடிய சூழல் இல்லை; எமக்குக் கால அவகாசம் வேண்டும்" என்ற கோரிக்கையை இந்தச் சந்திப்பில் இராணுவத்தினர் முன்வைத்தனர்.

### மக்களின் ஆதங்கம் நியாயமானது

எமதுமக்கள்பொறுமையாக நீண்டகாலம் காத்திருக்கின்றனர். ஆட்சிமாற்றம் ஏற்பட்டு இரண்டு வருடங்கள் கடந்தும் இன்னமும் காணிகள் கையளிக்கப்படவில்லைஎன்று மக்கள் ஆதங்கத்தில் போராடுகின்றனர். மக்கள் பொறுமையை இழந்த நிலையிலேயே போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

மக்களுடைய விருப்பத்தை மீறி நாங்கள் எதனையும் செய்யப் போவதில்லை. அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை. அதே நேரத்தில் இந்த விடயத்தை வெற்றி கொள்ளும் வகையில் செயற்பாடுகள் இடம்பெறுமானால் அதனை எமது மக்களுக்கு விளக்கி அவர்களுடைய விருப்பத்தின் அடிப்படையில் இந்த விடயத்தை முன்னெடுப்போம். இந்தக் காணி விவகாரத்துக்கு உடனடியாக அரசு முற்றிப்புள்ளி வைக்கவேண்டும்.

மக்கள் காணிகளுக்குப் போக முடியாமல் தவிக்கின்றனர். இந்த நிலைமை தொடர முடியாது. எனவே, பாதுகாப்புப் படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள மக்களின் காணிகள்உடன்விடுவிக்கப்படவேண்டும். தேவையான காணிகள் தொடர்பில் அரசு பரிசீலிக்க வேண்டும். அனைத்துக் காணிகளையும் வைத்திருக்க முடியாது. இன்று (நேற்று) ஆரம்பித்திருக்கும் எமது இந்த முயற்சி தொடரும். கட்டாயம் காணிப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும்" என்றார். (உ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை விசாரித்த ஜனாதிபதி துறவிகளுக்கான காணிக்கையையும்செலுத்தினார். பின்னர்நாகதீப புராண ரஜமகா விகாரையிலுள்ள அருங்காட்சியகத்தையும் பார்வையிட்டார்.

அதைத் தொடர்ந்து நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்குச் சென்ற ஜனாதிபதி அங்கும் வழிபாடாற்றினார்.

இதன்போது நயினாதீவுக்குச் சுற்றுலா சென்றிருந்த தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளுடனும் ஜனாதிபதி உரையாடினார்.

ஜனாதிபதியின் நயினாதீவு விஜயத்தின்போது ருவன்வெலி மகாசாயவிகாராதிபதிவண. பல்லேகமஹேமரதனநாயக்கதேரரும் கலந்துகொண்டார். நேற்று மாலை ஜனாதிபதி கொழும்பு திரும்பினார். (ம)

மேலதிக படங்கள் 20 ஆம் பக்கத்தில்.

## காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று கொழும்பில் பாதுகாப்பு அமைச்சில் பாதுகாப்பு உயர் தரப்புக்கும், கூட்டமைப்பு உயர் பீடத்துக்கும் இடையில் நடைபெற்ற கூட்டத்தில் இது தொடர்பாக முடிவு செய்யப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின் பிரகாரம் அடுத்துவரும் நாள்களில் மாவட்ட மட்டக்கள ஆய்வுகளில், மாவட்ட மட்டப் படை அதிகாரிகளும் கூட்டமைப்புப் பிரதிநிதிகளும் இணைந்து ஈடுபடவுள்ளனர்.

நேற்றைய கூட்டத்தில் பாதுகாப்புத் தரப்பில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், உயர் அதிகாரிகள், இராணுவத் தளபதி, உயர் இராணுவ அதிகாரிகள் மற்றும் கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் உயர் அதிகாரிகளும் -

தமிழ்க்கூட்டமைப்புசார்பில் அதன் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, சுமந்திரன், சி.சிறிதரன், ஈ.சரவணபவன், வைத்தியர்சிவமோகன், சாள்ஸ்நிர்மலநாதன், திருமதிசாந்திசிறிஸ்கந்தராஜா, சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டம் தொடர்பாகவும், தீர்மானிக்கப்பட்டுள்ள பொறிமுறை தொடர்பாகவும் கூட்டத்தின்பின்னர்எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் சம்பந்தன் தெரிவித்தவை வருமாறு:-

"வடக்கில் படையினர் வசமுள்ளகாணிகளைவிடுவிப்பது தொடர்பில் நாளையும், நாளை மறுதினமும்முல்லைத்தீவிலும், யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் விசேட கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

வடக்கில் படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் விசேடகூட்டங்களை முல்லைத் தீவிலும், யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் நடத்துவது தொடர்பில், அரசுடன் தற்போது நடத்த அரசுடன் இணக்கம் எட்டப்பட்டுள்ளது. அதன் பின்னர் மன்னார், வவுனியா மற்றும் கிழக்கு மாகாணங்களில் படையினர் வசமுள்ள பொது மக்களின் காணிகள் தொடர்பில் கலந்துரையாடப்படும்.

### நாளை முல்லைத்தீவில் விசேட கூட்டம்

நாளை புதன்கிழமை முல்லைத்தீவில் விசேட கூட்டமொன்று ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், முல்லைத் தீவு மாவட்ட அரச அதிபரும், படை அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

### நாளைமறுதினம் யாழ். - கிளிநொச்சியில்..

மறுநாள் 20ஆம் திகதி வியாழக்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், மாவை சேனாதிராசா மற்றும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் காணி விவகாரம் தொடர்பில் இராணுவ அதிகாரிகள் யாழ். மாவட்ட அரச அதிபருடன் கலந்துரையாடி படையினர் வசமுள்ள காணிகளைப் பார்வையிடவுள்ளனர். அன்றையதினம் மாலை கிளிநொச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் தலைமையில் காணி விடுவிப்பு தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, முள்ளிக்குளம் தொடர்பிலும் கடற்படைத் தளபதி பற்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் கூட்டமொன்று நடைபெறவுள்ளது. இதற்கான திகதி கடற்படைத் தளபதியுடன் தொடர்பு கொண்டு தீர்மானிக்கப்படும்.

இந்தக் கூட்டங்கள் முடிவடைந்த பின்னர், ஆராயப்பட்ட கருமங்கள்தொடர்பில்மீண்டும் பாதுகாப்புஅமைச்சின்செயலாளரின் அலுவலகத்தில் கூடிப் பேசவுள்ளோம். இதன்போது வடக்கில் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள காணிகள் தொடர்பில் ஒரு பட்டியல் தயாரித்துக் கொடுக்கவுள்ளோம். அதனடிப்படையில்பிரச்சினைக்குத் தீர்வுகாண உள்ளோம்'' என்றார். (உ)

## ஐநூறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவலைக்குரிய விடயமாகும் எனவும் அவர்கள் கூறினர்.

அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் தங்களுக்கு நியமனம்வழங்கக்கோரிகாரைதீவு விபுலானந்தா சதுக்கம் அருகே முகாமிட்டு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று ஐம்பதாவது நாளாகவும் அவர்களின் போராட்டம் தொடர்ந்தது.

நேற்றைய போராட்டத்தின் போதுவேலையில்லாப்பட்டதாரிகளின் தலைவர் நசுருத்தீன் கருத்துவெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 50 நாள்களாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வேலையற்ற பட்டதாரிகளின்கோரிக்கைகள் இன்னும் அரசியல்வாதிகளுக்குத்தெரியவில்லை. இதுவரை ஒருதீர்வையும் அவர்கள் தரவில்லை.

எனவேஎதிர்வரும்தேர்தலில் நாம்யார்என்பதைவெளிப்படுத்துவோம். எத்தனையோ அரசியல்வாதிகள் வந்துபோனார்கள். ஆனால் இன்னும் தீர்வில்லை. புதுவருடம் தாண்டியும் எமது போராட்டம் தொடர்கிறது. நாம் மனம் தளரமாட்டோம். - என்றும்அவர் தெரிவித்தார்.

நேற்றைய போராட்டத்தின் போது அவர்கள் போராடும் இடம் எங்கும் கறுப்புக் கொடிகளைக் கட்டியிருந்தனர். 'நாளைய தலைவர்கள் நாங்களே' என்ற பதாகையைப் பிடித்தவண்ணம் அவர்கள் சத்தியப்பிரமாணத்திலும் ஈடுபட்டனர். (ம)

## பிரமுகர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுடைய இந்தக் குண்டு, அப்பகுதியில் உள்ள வீடொன்றின் முற்றத்தில் இருந்து மீட்கப்பட்டது. அந்த வீட்டில் வசிக்கும் பெண்ணொருவர், தன்னுடைய வீட்டு முற்றத்தில், குழியொன்றைத் தோண்டியபோதே, சந்தேகத்துக்கிடமான பொருள் தென்பட்டுள்ளது.

அந்தப்பொருள்தொடர்பில், பொலிஸாருக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர், குண்டு செயலிழக்கும் பிரிவினர் வருகைதந்து அக் குண்டை மீட்டுச் செயலிழக்கச் செய்தனர்.

இந்தக்குண்டானது, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றும், யுத்த காலத்தில் அதி முக்கிய பிரமுகர்களின் வாகனங்களை இலக்கு வைத்துத் தாக்கியழிப்பதற்காகவே இம்மாதிரியான குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## கைதாவார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலக்கத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தக் காரணங்களால் ஷிரந்தி ராஜபக்ஷ விரைவில் கைதுசெய்யப்படுவார் எனக் கொழும்பு ஊடகம்ஒன்றுசெய்தி வெளியிட்டுள்ளது. (இ)

## சீனாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குமார் சிங் இந்தியக் கடற்படையின் கிழக்குப் பிராந்திய தளபதியாகவும் கடலோரக் காவல் படையின் பணிப்பாளராகவும் பணியாற்றியிருந்தார். தற்போது ஓய்வுபெற்றுள்ள அவர், தனது கட்டுரையில் இலங்கையில் சீனத்தலையீடுதொடர்பாக மேலும் குறிப்பிடுகையில் -

சீனாவின் காசோலைப் புத்தக இராஜதந்திரத்தில் இருந்து மோசமான பாடத்தைக் கற்ற முதலாவது நாடு இலங்கையாகும்.

முன்னையசீனசார்பு ஆட்சியாளர் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில், புதிய தொடருந்துப் பாதையை அமைக்கவும் கொழும்புதுறைமுகத்தில்புதிய கொள்கலன் இறங்குதுறை ஒன்றை அமைக்கவும், காலியையும் கொழும்பையும் இணைக்கும் நெடுஞ்சாலைகளை அமைக்கவும் அம்பாந்தோட்டை அருகே புதிதாக மத்தல ராஜபக்ஷ அனைத்துலக விமான நிலையத்தை அமைக்கவும் சீனாவுக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இன்று அம்பாந்தோட்டைத் துறைமுகமும் அதற்கு அருகேயுள்ள விமான நிலையமும் பயன்படுத்தப்படாதவையாக இருப்பதுடன் இலங்கைக்குஒரு நிதிச் சுமையாகவும் மாறிவிட்டன.

சீனா சுமார் 9 பில்லியன் டொலரை முதலீடு செய்தது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்காக 1.1 பில்லியன் டொலர் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாதிருப்பதாக இலங்கை தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், கடன்நிவாரணம் தொடர்பான சர்ச்சைக்குரிய உடன்பாடு ஒன்று செய்து கொள்ளப்படவுள்ளது. இதன்படி, சீன நிறுவனம் ஒன்று அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் 60 தொடக்கம் 80 வீதம் வரையான முகாமைத்துவத்தை 99 அல்லது 50 ஆண்டுகள் வரையில் கட்டுப்படுத்தும் குத்தகையைப் பெற்றுக் கொள்ளவுள்ளது.

இந்த உடன்பாடு சீனாவுக்கும் - இலங்கைக்கும் இடையில் கையெழுத்திடப்பட்டால் அம்பாந்தோட்டைத்துறைமுகத்தில் சீனாவின் கடற்படைத் தளமும், அதற்கு அருகில் உள்ள விமான நிலையத்தில் சீனாவின் விமானப்படைத் தளமும் அமைக்கப்படுவது உண்மையாகி விடக் கூடும். - என்றுஅவர்எச்சரித்துள்ளார். (ம)

## மீதொட்டமுல்ல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை இடம்பெற்ற மீட்பு நடவடிக்கையைத் தொடர்ந்தே இந்த எண்ணிக்கை அதிகரிப்பு ஏற்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி அனர்த்தத்தில் இதுவரை 15 பெண்களும், 15 ஆண்களும் உயிரிழந்துள்ளனர். இவற்றில் 6 பேர் சிறுவர்கள் எனவும் இராணுவம் கூறியது.

இந்த அனர்த்தத்தால் உயிரிழந்த எட்டுப் பேரின் இறுதிக் கிரியைகள் நேற்று கொலன்னாவ பொது மயானத்தில் இடம்பெற்றன. மீட்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படும் என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட சொத்து சேதங்கள் மதிப்பிடப்பட்டு 25 இலட்சம் ரூபாய் வரை நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நிதி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இ.போ.ச.பஸ்களில் பாதுகாப்பு குறித்த ஸ்ரிக்கர்கள் விரைவில்




கொழும்பு, ஏப்.18

இலங்கை போக்குவரத்துச்சபைக்கு சொந்தமான பஸ்களில் பயணிக்கும்பயணிகளின் பாதுகாப்பு தொடர்பில் விசேட ஸ்ரிக்கர்களை அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபை இதற்கான தீர்மானங்களை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஸ்ரிக்கர்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அல்லாமல் வாகனத்தை செலுத்தும் சாரதிகள் தொடர்பில், உடன் அறிவிக்கும் வகையிலான தொலைபேசி இலக்கங்களும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சி.ரி. ஸ்கான் இன்றி நோயாளர்கள் அவதி!



### நோயாளர் நலன்புரி சங்கம் சுட்டிக்காட்டு

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வடமாகாண சபையின்நிர்வாக ஆளுகைக்குட்பட்ட வைத்தியசாலைகளில் மிகப் பெரிய வைத்தியசாலையாகும். இங்கு, சி.ரி.ஸ்கான் இயந்திரம் இல்லாதமையால் நோயாளர்கள் பெரிதும் அவதியுறுகின்றனர்.

- இவ்வாறு தெல்லிப்பழை நோயாளர் நலன்புரி சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஏனைய வைத்தியசாலைகளில் இல்லாத இரு பெரும் பிரிவுகளான புற்று நோய் சிகிச்சைப் பிரிவு, உளநல சிகிச்சைப் பிரிவு ஆகிய சிறப்பு அலகுகள் உள்ளன. யாழ். பல்கலைக்கழகத்தின் போதனா பிரிவுகளாகவும் இந்த இரு அலகுகளும் காணப்படுகின்றன.

இந்த நிலையில், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இருந்து ஒருநாளைக்கு 25 இற்கும் மேற்பட்ட புற்று நோயாளர்கள் சி.ரி. ஸ்கான் எடுப்பதற்காக அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப் படுகின்றனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையிலும் ஒரு சி.ரி. ஸ்கான் மட்டும் உள்ளமையால் அந்த ஸ்கான் பெரும்பாலான காலங்கள் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றமையால் இந்த நோயாளர்கள்வவுனியாவைத்தியசாலைக்கோ அன்றி அனுராதபுரம் வைத்தியசாலைக்கோ கொண்டு செல்லப்படுகின்றனர். சில நோயாளர்கள் சி.ரி.ஸ்கான் எடுப்பதற்குக் கொண்டு செல்லப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மரணிக்கின்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இதனைவிட, புற்றுநோய் தவிர்ந்த ஏனைய மருத்துவ விடுதி நோயாளர்கள், உளநல நோயாளர் களும் இவ்வாறு சி.ரி. ஸ்கானுக்காகத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படுகின்றமை வழக்கம்.

அத்துடன், அம்புலன்ஸ் சேவைகளும் இங்கு போதியனவாக இல்லாத நிலைமையே' காணப்படுகின்றது. சில புற்று நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக மகரகமவுக்குக் கொண்டு செல்ல வேண்டிய நிலைமையும் காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் அம்புலன்ஸ் சேவை நோயாளருக்குத் தேவை ஏற்படுகின்ற உரிய நேரத்தில் கிடைக்காதமையால் நோயாளர்கள் அவதியுறுகின்றனர்.

இது இவ்வாறிருக்க, தற்போது மத்திய சுகாதார அமைச்சால் வடமகாணத்துக்கு என்று சி.ரி. ஸ்கான் ஒன்று வழங்கப்பட இருப்பதாக கடந்தவாரம் எமது வைத்தியசாலைக்கு வருகை தந்த மத்திய சுகாதார அமைச்சருடனான கலந்துரையாடல் மூலம் அறியக்கிடைத்தது. ஆனால், அந்த சீ.ரீ.ஸ்கான் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையை விடுத்து, வேறு ஒரு வைத்திய சாலைக்கு வழங்கப்பட உள்ளதாக அறியமுடிகின்றது. இந்த விடயத்தில் வடக்கு மாகாணசபை உரிய நிலைப்பாட்டை எடுத்து மக்கள் நலன் கருதிச் செயற்பட வேண்டும். - என்றுள்ளது. (எ)

## சிகரெட் விலை அதிகரிப்பை அடுத்து புகைப்போரின் எண்ணிக்கை வீழ்ச்சி!

### ஹெல்தி லங்கா நிறுவனத் தலைவர் கூறுகிறார்

கொழும்பு,சிகரெட்டுகளின் விலையை அதிகரிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட தீர் மானம் காரணமாக புகைத்தல் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளதாக ஹெல்தி லங்கா நிறுவனத்தின் தலைவர் மஹேந்திராஜயசிங்ஹ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதன் மூலம் அரசின் வருமானம் குறைந்துள்ள போதிலும், நீண்ட கால சுகாதார வசதிகளுக்காக அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் பெரிய தொகை சேமிக்கப்பட்டுள்ளது. பொது மக்களைப் போதைப்பொருள் மற்றும் மதுசாரங்களில் இருந்து மீட்டெடுப்பதற்காகநடைமுறை வேலைத்திட்டங்கள்பலவற்றை தற்போது ஹெல்தி லங்கா நிறுவனம் முன்னெடுத்துள்ளது.

சமுர்த்தி அதிகார சபையுடன் இணைந்து சிறுவர்களை தெளிவுபடுத்தும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிறுவர்களை தெளிவுபடுத்துவது மிகவும் நன்மை பயக்கும் விடயம்.- என்றார். (எ)

## உலகை அச்சுறுத்தும் டெங்கு வைரஸ்; உலக சுகாதார நிறுவனம் முற்றுப்புள்ளி

உலகையே அச்சுறுத்தும் டெங்குக் காய்ச்சலுக்கான தடுப்பூசி ஒன்றை பயன்படுத்த உலக சுகாதார ஸ்தாபனம் முதல் முறையாக அனுமதி வழங்கியுள்ளது.

இந்தத் தடுப்பூசி 'டெங்கு வெக்சியா' என்று அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதி வழங்கியுள்ள தடுப்பூசியை இலங்கையில் பயன்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக சுகாதார அமைச்சின் செயலாளர் அநுர ஜயவிக்கிரம தெரிவித்துள்ளார்.

மேலும், 20 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பயனாகவே இந்த தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆய்வில் இந்தத் தடுப்பூசி 70வீதம் வெற்றியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒன்பது வயதைக் கடந்த ஒவ்வொரு நபருக்கும் வருடத்துக்கு மூன்று தடவைகள் இந்த தடுப்பூசியை ஏற்றமுடியும் என்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மெக்சிக்கோ, பிறேசில், எல்சல்வடோர்மற்றும்பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் இந்தத் தடுப்பூசியைப் பயன்படுத்த அனு மதி வழங்கப்பட்டுள்ளது.

டெங்குக் காய்ச்சல் தென் கிழக்கு ஆசியா, இலத்தீன் அமெரிக்காவில் அதிகமாக பரவி வருகின்றது. 120 நாடுகளில் வருடாந்தம் 3 கோடி 90 லட்சம் மக்கள் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்படுகின்றனர் என்று கூறப்படுகின்றது.

இலங்கையில் கடந்த நான்கு மாதங்களில் மாத்திரம் டெங்கு காய்ச்சலால் 53 பேர் உயிரிழந்துள்ளனர். 29 ஆயிரத் துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## சட்டவிரோத சாராய விற்பனை அக்கராயன் மக்கள் விசனம்!

சட்டவிரோதமான முறையில் அரச சாராய விற்பனையில் ஈடுபடுபவர்களால் தமது பகுதிகளில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக அக்கராயன் அணைக்கட்டு வீதி, வைத்தியசாலை ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி அக்கராயன் அணைக்கட்டு வீதி வைத்தியசாலை ஆகியவற்றை அண்மித்த பகுதிகளில் கசிப்பு விற்பனை மற்றும் அனுமதிப்பத்திரமின்றிய அரச சாராய விற்பனை என்பன அதிகரித்துள்ளன.

இதன் விளைவால், அந்த வீதியை போக்குவரத்துக்குப் பயன்படுத்த முடியாமல் இருப்பதாகவும், அதிகமான இளைஞர்கள் குடிப் பழக்கத்துக்கு உள்ளாகி, அந்த இடங்களில் அதிக நேரம் தங்கியிருந்து வீதியால் பயணிப்போர்களுக்கு தொந்தரவு கொடுப்பவர்களாக மாறுகின்றனர்.

இதேவேளை, அந்தப் பகுதியில் பொலிஸார் தேடுதல்களை மேற்கொண்டு பலரை கைது செய்து சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தி வருகின்றனர். எனினும் ஒருசிலர் இந்த சட்டவிரோதமான செயற்பாட்டை தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர் என்று பொதுமக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அரசதிணைக்களம் ஒன்றில் கடமையாற்றும் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அந்தப்பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி அரசசாராயம் விற்பனை செய்து வந்த நிலையில் 3 தடவைகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றினூடாக தண்டிக்கப்பட்டுள்ளார்.

ஆனால், அதன் பின்னரும் இந்த சட்டவிரோத சாராய விற்பனை குறைந்ததாகத் தெரியவில்லை என்று முதியவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

முக்கிய பொறுப்புக்களில் உள்ள சிலரே இவ்வாறான சட்டவிரோத மதுபான விற்பனைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் அந்தப் பகுதியில் உள்ள இளம் சமூகத்தினரையும் சீரழித்து வருகின்றனர். எனவே, இதனைக் கட்டுப் படுத்த உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பொன்தீவுகண்டல் கிராமத்தில் இலவச கணினிப் பயிற்சிநெறி



நண்பனின் தேவை நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் மன்னார் முருங்கன் பொன்தீவுகண்டல் கிராமத்தில் இலவச் கணினிப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நற்பணி மன்றத்தின் இயக்குநர் கே.பவமொழி பவன் தலைமையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை பொன்தீவுகண்டல் ஆலய பிரதான மண்டபத்தில் இதன் ஆரம்ப நிகழ்வு இடம் பெற்றது.


நண்பனின் தேவை நற்பணி மன்றத்தின் 16 ஆவது கிராமமாக பொன்தீவுகண்டல் கிராமம் தெரிவு செய்யப்பட்ட நிலையில் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு 3 மாதங்களை அடிப்படையாகக் கொண்ட கணினி பயிற்சிநெறி ஆரம்பித்து வைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

## நயினாதீவில் நேற்று மைத்திரி...!










# முல்லைத்தீவு செயலகத்தின் முன்னால் 41 ஆவது நாளாகவும் போராட்டம்



முல்லைத்தீவு, ஏப். 18

காணாமல்ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்து வரும் போராட்டம் நேற்றுடன் நாற்பத்தோராவது நாளை எட்டிப்பிடித்துள்ளது.

நாட்டில் இடம்பெற்ற யுத்த காலத்தில் கடத்தப்பட்டுக் காணாமல் போகச்செய்யப்பட்டவர்கள் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இராணுவத்திடம் சரணடைந்த நிலையில், காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள் என்று [illegible] உறவுகள் தொடர்பில் அரசு [illegible]தி லளிக்க வேண்டும் என வலியுறுத்தி, முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்பாகக் கூடாரம் அமைத்துள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், தொடர்போராட்டத்தை முன்னெடுத்துவருகின்றனர். தமக்குத் தீர்வுகள் கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, நேற்றைய தினம் மதத்தலைவர்கள் சிலரும் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்டவர்கள் அந்த மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் ஆறுதலும் கூறினர். (இ-[illegible])

## சீற்றம் கொண்டுள்ள வங்காள விரிகுடா!









மட்டு., காரைதீவு விளையாட்டுக்கழகம் நடத்திய பாரம்பரிய கலாசாரப் புத்தாண்டு விளையாட்டு விழா நேற்று நடைபெற்றது. விழாவில் கடலில் விசைப் படகு ஓட்டும் நிகழ்வும் நடந்தது.

இதன்போது, சீற்றமுற்ற வங்காளவிரிகுடாவில் விசைப்படகுகள் அலையில் அடிக்கப்பட்டு திக்குமுக்காடிய காட்சிகளையே இங்கு காண்கிறீர்கள். (இ)

# நல்லினப் பசுக்குள் பத்துப் பேருக்கு



வவுனியா, ஏப். 18

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தபெண்தலைமைத்துவக் குடும்பங்கள் 10 பேருக்கு நல்லினப் பசு மாடுகளை வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் நேற்று வழங்கினார்.

புலம்பெயர் நாட்டில் வசிக்கும் ஒருவரின் நிதியுதவியில் பசு மாடுகள் வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை வவுனியா – சாஸ்திரி கூழாங்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது வட மாகாண சுகாதார அமைச்சர், நிதியுதவி அளித்த புலம்பெயர் தமிழர் மற்றும் பயனாளிகள். கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (இ-100)

## தகவல் அறியும் உரிமை தொடர்பான கருத்தரங்கு

அரச உயர்நிலைப் பணியாளர் நூறு பேருக்கும் இருபது ஊடகவியலாளர்களுக்குமான தகவல் அறியும் உரிமை தொடர்பான கருத்தரங்கு யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கில் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையுடன் 'சொண்ட்' நிறுவனம், 'அக்ரெட்' நிறுவனம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் இணைந்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. (இ)

# பொட்டு அம்மான் உயிரிழந்தார் என ஒரு போதும் கூறவில்லை - கருணா

கொழும்பு, ஏப். 18

தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் பொட்டு அம்மான் உயிரிழந்துவிட்டார் என்று நான் ஒருபோதும் கூறவில்லை.

– இவ்வாறு விநாயகமூர்த்தி முரளிதரன்(கருணா)கூறியுள்ளார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு இதனைக் கூறிய கருணா, இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-



பொட்டு அம்மானின் உடல் கிடைக்கவில்லை. எனவே அவர் உயிரிழந்தார் என உறுதிப்படுத்தி என்னால் கூற முடியாது. ஆனால் பொட்டு அம்மான் உயிரிழந்தார் என இராணுவம் கூறுகின்றது.

2009ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதியின் பின்னர் இலங்கையில் பொட்டு அம்மான் தொடர்பில் எவ்வித தகவல்களும் கிடையா. – என்றார் அவர். (இ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள [illegible] 18.04.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.